Registered as a NewsPaper in Ceylon    விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49    மலர் 12
போன்: 389    இதழ்: 68
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சித்திரை 7 ஸபர் 13 திங்கட்கிழமை [20-4-70]

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் ட்கட வேண்டும்
தபால் அல்லது ஆமூலாப் அனுப்பப்படும்.

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

# கலகாவில் காடையர் வன்செயல்; குண்டு வீச்சில் 10 பேர் காயம்!

கொழும்பு, ஞாயிறு கலகா மாவட்டத்திலுள்ள கலகா குருப் தோட்டத்தில் காடையர்கள் தொழிலாளர்கள்மீது தாக்குதல் நடத்தியிருப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துக்கு புகார் செய்திருக்கின்றது.

ஆயுதம் தாங்கிய காடையர் கோஷ்டியொன்று கலகா குருப் தோட்டத்து தொழிலாளர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் நாட்டு குண்டுகளை வீசியதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டிருக்கிறது தோட்டத்து 'லயன்' அறைக்குள் எறிகுண்டுகளை வீசியதினாலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததினாலும் பத்துப்பேர் காயமடைந்திருப்பதாக அறியப்படுகின்றது, இவர்களில் நால்வரின் நிலை மோசமாகவிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஆயுதம் தாங்கிய பொலிசார் ஸ்தலத்துக்கு விரைந்து காவல் புரிந்துவருகிறார்கள். (சி பி ஏ)

## கைதான இளைஞர் பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம் திங்கள் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடந்த அரசியல் கட்சியொன்றின் பிரசாரக் கூட்டமொன்றில் கேள்விகேட்ட ஓர் இளைஞன் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

## தீ விபத்தில் மூன்று கடைகள் சேதம்

யாழ்ப்பாணம், திங்கள் கிளிநொச்சியில் கறடிப்போககு சந்தியில் நேற்று நண்பகல் ஏற்பட்ட தீவிப்தொன்றில் மூன்றுகடைகள் எரிந்து சாம்பராயின வைக்கோல் போர் ஒன்றில் ஏற்பட்ட தீ பரவியதன் விளைவாக இந்தக்கடைகள்எரிந்து சாம்பரானதாகக் கூறப்படுகிறது இதுபற்றிகிளிநொச்சி பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர்

# துவேஷத்தை கிளப்புவோர்மீது எடுக்கவேண்டிய நடவடிக்கை

## பொலிஸ்மகாநாட்டில்ஆலோசனை

கொழும்பு, ஞாயிறு வகுப்பு, இன, மத, துவேஷங்களை கிளப்புவோர் மீது இரகசிய பொலிசாரின் கண்காணிப்பு இருக்குமென்றும், எப்படிப்பட்ட பெரியவராக இருந்தாலும், அவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும், இன்று நடைபெற்ற பொலிஸ் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டதாக அறியப்பட்டது.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் 20 பொலிஸ் சுப்பிரிண்டன்களும் 4 உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்களும் கலந்து கொண்டனர்.

துவேஷங்களை கிளப்புவோர் மீது, கிளப்பமுயற்சிப்போர் மீதும்என்னென்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுபற்றி இம்மகாநாட்டில் விளக்கமாகத்தெரிவிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

தேர்தல் சட்டத்தை எப்படி அமுல் நடத்த வேண்டுமென்பதுபற்றியும், இச்சட்டத்தை மீறுவோர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதுபற்றியும் தெரிவிக்கப்பட்டதாகஅறியப்படுகிறது.

## 'வடக்கு வாழ வேண்டுமானால் காங்கிரசையே ஆதரிக்குக!'

### கிளிநொச்சியில் ஜி. ஜி.



யாழ்ப்பாணம், திங்கள் ''வட பகுதியில் பல்கலைக்கழகம் நிறுவப்படுவதை தமிழரசுக் கட்சியைத் தவிர வேறு எந்த அரசியல் கட்சியும் எதிர்க்கவில்லை. ஆதலால் தமிழரசுக்கட்சியினரை மீண்டும் தெரிவுசெய்து ஆட்சி மன்றத்துக்கு அனுப்பினால். வடபகுதியில் பல்கலைக்கழகம் நிறுவ அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிக்கு நிச்சயம் முட்டுக்கட்டை போடுவர்கள். அரசாங்கமும்இதையே சாட்டாகவைத்துக் கொண்டு, வடபகுதியில் பல்கலைககழகம் நிறுவும், நட அபிவிருத்தித்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கும் தமிழரசார் தேசிய அரசாங்கத்திலிருந்த காலத்தில் நாங்கள் எடுத்துவந்த ஒவ்வொரு முயற்சிக்கும் மறைமுகமாகத் தடைபோட்டுவந்தனர் அவர்கள் தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறிய பின்னர்தான் எங்களால் சில அபிவிருத்திகளைச் செய்யமுடிந்தது.

பல்கலைக்கழகம் பற்றி தீர்மானிக்க, நியமிக்கப்பட்ட குழுவினர்தேர்தலுக்கு முன்னர், தமது அறிக்கையை வெளியிட்டாலும், தேர்தலுக்குபிறகுவரும் அரசாங்கம்தான் அதை அமுல்செய்யும் ஆதலால் தமிழர்கள் இதில் தான் கவனமாயிருக்க வேண்டும் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்

## உற்சவங்கள்

யாழ்ப்பாணம் திங்கள் புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஸ்ரீஇராஜஇராஜேஸ்வரி அம்பாள் கோயில்தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமைநடைபெறும்

கோப்பாய்கற்பகப்பிள்ளையார் கொடியேற்ற உற்சவமும் திருக்கேதீஸ்வரம் தீர்த்த உற்சவமும், ஊரதீவு பாணவிடைதான் தோன்றி ஈசுவரர் கொடியேற்றமும் நாளை நடைபெறும்.

## "ஈழநாடு" பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் 'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

### உதவி வழங்கியோர்:

| | |
|---|---|
| நேற்றுவரை சேர்ந்த தொகை | 10, 657-07 |
| சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்யாழ்ப்பாணம் | 78-00 |

## சகோதரனை கொலைசெய்தவருக்கு ஏழு வருட கடுழியச் சிறை!

திருக்கோணமலை, ஞாயிறு திருக்கோணமலை பத்தாங்குறிச்சியைச் சேர்ந்த அழகானந்தன் சோதிலிங்கம் என்பவரை அவரது சகோ தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

திருக்கோணமலையில் அரம்பமான உயர் நீதிமன்ற வி[illegible]ன்"பின் முதல் கொலை என்பதனால் நீர் பெருந் தண்டனையிலிருந்து விடுபட்டிருக்கிறீர் இத் தண்டனை மற்றவர்களுக்கோரு வழக் பாடமாக இருக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பாட்சி மூலம் ஒற்றுமையைக் காப்போம்

மட்டுவில், ஞாயிறு 'இலங்கையில் ஐக்கியத்தைப் பேணிக் காத்திடும் பெருநோக்குடன், இணைப்பாட்சிமுறையாம் சமஷ்டி முறையைஏற்படுத்தி, அதன் மூலம் ஈழத்தமிழினத்தின் தனித்துவத்தை உலகறியச் தைத்தது

தமிழரசு வாலிப முன்னணியின் உபதலைவர் திரு எம் குணராஜா செயலாளர் திரு எஸ் பி கணபதிப்பிள்ளை உட்பட பலர் பேசினர் திரு கே ராஜதுரை வரவேற்புரை நிகழ்த்தினர்

## மீண்டும் கொடி பறந்தது

மட்டுவில், ஞாயிறு றேன்' என்று திரு. வி

நிறுவ அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிக்கு நிச்சயம் முட்டுக்கட்டை போடுவார்கள். அரசாங்கமும்இதையே சாட்டாக வைத்துக் கொண்டு, வடபகுதியில் பல்கலைக்கழகம் நிறுவும், நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும்''.

கிளிநொச்சி றெட்ரிக்கோ மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் தேர்தல்பிரசாரக் கூட்டத்தில், திரு ஜி ஜி. பொன்னம்பலம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்

திரு.வி ஆனந்தசங்கரியை ஆதரித்து நடைபெற்ற இக் கூட்டத்திற்கு நேற்று முன் தினம், நண்பகல் 12 இடங்களிலிருந்து ஆரம்பமான சைக்கிள் டிரர்க்டர் ஊர் வலங்கள் இரவு 11 மணிக்கு கூட்டமைதானத்தை வந்தடைந்தன.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

கடந்த தேர்தலில் தமிழரசுக்கட்சியினருக்கு பதிலாக தமிழ்க் காங்கிரஸினரை பெரும்பான்மையாக ஆட்சி மன்றத்திற்கு அனுப்பியிருந்தால், 66-ம் ஆண்டே வடக்கில் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டிருக்கும் அது மட்டுமல்ல, வடபகுதியில் பல வெளியிட்டாலும், தோதலுக்குபிறகுவரும் அரசாங்கம்தான் அதை அமுல்செய்யும் ஆதலால் தமிழர்கள் இதில் தான் கவனமாயிருக்க வேண்டும் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவேண்டுமானுல், தமிழ் காங்கிரசினரை தெரிந்து அனுப்புங்கள் தமிழரசாரை அனுப்பினுல், பல்கலைககழகம், எங்குமே நிறுவப்படாது.

முன்னுள் வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் பேசும்போது:பொதுமேடையில் மாவட்டசபையைப்பற்றியோ, பல்கலைக்கழகத்தைப் பற்றியோ, பேசுவதற்குத்தான், தயாராக இருப்பதாகவும், தெரிவித்தார்.

முன்னுள் சாவகச்சேரி எம். பி திரு. வி. குமாரசாமி பேசும்போது கிளிநொச்சித் தொகுதியை உருவாக்கிய பெருமை தமிழ் காங்கிரஸிற்கே உரியதென்றும், மகாவலிகங்கை வடக்கே திருப்பப்பட்டதும், கிளிநொச்சி வளமடையுமென்றும் கூறினுர்.

திரு. வி ஆனந்தசங்கரி, திரு என் ரி சிவஞானம் திரு ரி குணரத்தினம் உட்பட மற்றும் பலர் பேசினுர்கள். கூட்டம் நேற்று அதிகாலை 3மணிவரை நடைபெற்றது.

## ''வாலிபர் பிரச்னைகள் தீராவிடில் புரட்சி ஏற்ப டேதீரும்''

### கொடிகாமத்தில் ஜி. ஜி.

கொடிகாமம் ஞாயிறு

''தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு எதிர்வரும் தேர்தல்தான் கடைசிச் சந்தர்ப்பம். கடந்த தேர்தலில், தமிழ் மக்கள் விட்ட பிழையை மீண்டும் விட்டார்களேயானுல் எதிர்காலத்தில் தமிழினம் இந்நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே நிரந்தரமாக வாழும் நிலை ஏற்பட்டுவிடும். தமிழ் காங்கிரஸிற்கு ஒரே ஒரு சந்தர்ப்பம் தாருங்கள் உரிமைகளைப்பெற்றுத் தருகிறேம்'

கொடிகாமம் தமிழ் காங்கிரஸ் கிளையை திறந்து வைத்து பேசிய திரு. ஜி ஜி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. ஆ. கனகரத்தினம் தலைமையில் நேற்று நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு, ஜி. ஜி பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: தமிழரசுக்கட்சியினருக்குநீங்கள் 4 சந்தர்ப்பங்கள் கொடுத்தீர்கள். அவர்கள் உங்கள் உரிமைகளைப் பெறத்தவறிவிட்டார்கள். ஆதலால் இம்முறை தமிழ்க்காங்கிரஸிற்கு ஒரே ஒரு சந்தர்ப்பம் தாருங்கள். உரிமை பெருவிட்டால் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் தரும்படி உங்களிடம் கேட்கமாட்டோம். நிச்சயம் தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுத் தருவோம்.

திரு. வே குமாரசாமி பேசும் போது, வாலிபர் ஆதரவு எக்கட்சிக்கு கூடுதலாக இருக்கிறதோ அக் கட்சியே வெற்றிபெறுமென்றும், இம்முறை வாலிபரின் ஆதரவு வடபகுதியில் தமிழ்க்காங்கிரஸ் பக்கமே இருப்பதாகவும் கூறினுர்.

முன்னுள் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரமும் இவ்விழாவில்கலந்து கொண்டார்.

திருவாளர்கள் ரி. குலேந்திரராசா, க. ராஜகுலேந்திரன், திருமதி யோகேஸ்வரி கணேசலிங்கம் ஆகியோரும் பேசினுர்கள்.

## கருணுநிதி

சென்னை, ஏப், 19

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணுநிதி பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, கிழக்குஜெர்மனி, ஜப்பான், ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்ய உள்ளார்.

ஜப்பானுக்கு செல்லும் பொழுது ஒசாக்கா மாநிலத்தில் நடைபெறும் எக்ஸ்போ-70 கண்காட்சிக்கு முதலமைச்சர் விஜயம் செய்வார்.

திருக்கோணமலை, ஞாயிறு

திருக்கோணமலை பத்தாங் குறிச்சியைச் சேர்ந்த அழகானந்தன் சோதிலிங்கம் என்பவரை அவரது சகோதரன் சபாபதி ஆனந்தராசா என்பவர் 1969-ம் ஆண்டு ஏப்ரல் 18-ம் திகதி கத்தியால் குத்திகொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் எதிரியான சபாபதி ஆனந்தராசாவுக்கு நீதியரசர் ஏ சீ. ஏ அலஸ் 7 வருடக் கடுழியச் சிறைச் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

திருக்கோணமலையில்ஆரம்பமான உயர் நீதிமன்ற வி[illegible]ணையின் முதல் வழக்காக இவ்வழக்கு நீதியரசர் ஏ. சீ. ஏ. அலஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொவிளப்பட்டது.

எதிரியின் சார்பில் வழக்கறிஞர் திரு. இரங்கநாதன் ஆஜராகி இருந்தார்.

வழக்கின் தீர்ப்பை வாசித்த நீதியரசர் எதிரியைப் பார்த்து கூறியதாவது:-

''நீர் ஒரு இளங்குற்றவாளியாக இருக்கின்றீர் உமது வழககறிஞரின் வேண்டுகோளுக்சிணங்க தண்டனையைக் குறைத்து 7 வருடம் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கின்றேன். கைமோசக் கொலை என்பதனுல் நீர் பெருந் தண்டனையிலிருந்து விடுபட்டிருக்கிறீர் இத் தண்டனை மற்றவர்களுக்[illegible]ரு பாடமாக இருக்கட்டும்.

உனது சகோதரனுேடு சண்டைபிடித்து இரண்டு மணித்தியாலங்களுக்குப் பின் நீர் ஒரு புதுக் கத்தியோடு சம்பவம் நடந்த இடத்துக்கு வந்திருக்கிறீர். இது உமது கொலைவெறியைக் காட்டுகின்றது உனது சகோதரனின் நெஞ்சில் கொண்டுவந்த கத்தியால் குத்தியிருக்கிறீர். நீர் குத்தியவுடன் அவர் இறந்துவிட்டார். கைமோசக்கொலையென்று உமது வழக்கறிஞர் குறிப்பிட்ட படியால் தண்டனையைக் குறைத்திருக்கிறேன்.''

## சிறிமா வடக்கு விஜயம்

எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இம் மாத இறுதியில் வடக்குகிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்ய முடிவு செய்துள்ளார் என்றுதெரிகின்றது வடக்குகிழக்கு பகுதிகளில் போட்டியிடும் 17 இடதுசாரி ஐக்கிய முன்னணி அபேட்சகர்களுக்கு ஆதரவு தேடுமுகமாகவே அவர் இப்பகுதிக்கு விஜயம் செய்யவிருப்பதாக கட்சிவட்டாரங்கள் தெரிவித்தன. (சி பி ஏ)

## மாணவி பலி!

கதிர்காமம்,ஞாயிறு

கதிர்காமத்தில் மாணிக்க கங்கையில் நீராடிக்கொண்டிருந்த சுண்டிக்குழி மகளிர் கல்லூரி மாணவி குமுதினி பரிதாபமாக நீரில் மூழ்கி மாண்டார்.

தந்தையுடன் கதிர்காமம் சென்ற இந்தப் பதினைந்து வயது மாணவி மாணிக்க கங்கையில் தந்தையாருடனும், தமக்கையாருடனும் சேர்ந்து நீராடிக்கொண்டிந்தார் அப்போதுஇவர்கள்மூவரும் நீருக்குள் சிக்கிக்கொண்டார்கள் ஆயினும் தந்தையாரும், தமக்கையாரும் காப்பாற்றப்பட்டனர். ஆனுல் குமுதினி நீருக்குப் பலியாகி, அடுத்த நாளே கண்டுபிடிக்கப் பட்டார்

மாத்தளை தபால் அதிபர் திரு சதாசிவத்தின் புதல்வியான குமுதினி கச்சேரி-நல்லூர் வீதியில் வசிப்பவர்

மரணவிசாரணையில் விபத்திஞல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது

## ஜே. ஆர். -பேர்ளுட்டை இவர்கள் எதிர்க்கிறுர்கள்

கொழும்பு ஞாயிறு

கொழும்பு தெற்குதொகுதியில் திரு ஜே ஆர் ஜயவர்த்தனு லங்கா சமசமாஜக் கட்சியைச்சேர்ந்த பெர்னுட் சொய்ஸா, ஆகியவர்களுடன் சுயேச்சை வாதிகளான எஸ் ஸி பீரிஸ், எம் எஸ் எம் பாரூக், ஜனநாயக சோஸலிஸ முன்னணித்தலைவர் திரு ஆர் விஜயஇந்திரா ஆகியோர் கட்டுப்பணம் கடடியுள்ளனர்

### அத்தனகலை

அத்தனகலைத் தொகுதியில் ஸ்ரீமாவோபண்டாரநாயகாவுடன் ஐக்கியதேசியக் கட்சியைச்சேர்ந்த ஜே ஆர் சூரியப்பாலா, சுயேச்சை வாதி ஆர் ஏ டபிள்யூ ரத்ன சேகரா ஆகிய இருவரும் போட்டியிடுகின்றனர்

டெனியாய தொகுதியில் ஐக்கிய முன்னணியின் வேட்பாளராக போட்டியிடவிருக்கும் லங்கா ாமசமாஜகட்சியைச் சேர்ந்த திரு சுமனபாலதகநாயகாவுக்கு ஏதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரைப் போட்டிக்கு நிறுத்துவதற்கு கட்சி ஆதரவாளர்கள் முயற்சிசெய்து வருவதாகத் தெரிகின்றது 1960ல் தங்கள் கட்சிக்குக் கிடைத்திருந்த தொகுதியை இந்த முறை லங்கா சமசமாஜக் கட்சிக்கு கொடுப்பதற்கு இவர்கள் விரும்பவில்லைஎ.ன்றும்தெரிகிறது .(சி பி ஏ)

## கத்தோலிக்க திருச்சபை நடுநிலைமை வகிக்கும்

கொழும்பு, ஞாயிறு

வரும் பொதுத் தேர்தலில் நடுநிலைமை வகிக்கப் போவதாக கத்தோலிக்கத் திருச்சபை இன்று தெளிவு படுத்தியது.

கத்தோலிக்க பொதுமக்களும் குருவானவர்களும் எந்தக் கட்சியை ஆதரிக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட மாட்டார்களென்றும் கத்தோலிக்க திருச் சபையினர் அறிவித்துள்ளனர், (சி பி ஏ)

## 28பேர் கட்டுப்பணம் செலுத்தினர்

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுதியில், பருத்தித் துறை தமிழரசுவேட்பாளர் திரு கே, துரைரத்தினம்சாவகச்சேரித்தொகுதி தமிழரசு வேட்பாளர திரு வி என் நவரத்தினம்,உடுவில் தொகுதி சுயேச்சை அபேட்சகர் திரு விஞேதன், நல்லூர்தொகுதி வேட்பாளர் திரு சச்சிதானந்தன் ஆகியோர் நேற்று தம் கட்டுப்பணத்தையாழ்ப்பாணம் தேர்தல் காரியாலயத்தில் கட்டினர் இவர்களோடு இதுவரை யாழ்ப்பாணத்தில்28 பேர் தங்கள்கடடுப்பணத்தைக் கடடியுள்ளனர்

'இலங்கையில் ஐக்கியத்தைப் பேணிக் காத்திடும் பெருநோக்குடன், இணைப்பாட்சிமுறையாம் சமஷ்டி முறையைஏற்படுத்தி,அதன் மூலம் ஈழத்தமிழினத்தின் தனித்துவத்தை உலகறியச் செய்வதற்கு மூலை முடுக்குகளிலெல்லாம் வாலிபர்கள் கிளர்ந் தெழுந்துள்ளார்கள் என்ருல், அது சாவகச்சேரி தொகுதியில்தான் என்று பெருமையுடன் கூறுவதில் தவறிருக்க முடியாது'

சாவகச்சேரிசந்தைமைதானத்தில், தியாகிகள் அரங்கில் இன்று ஆரம்பமான தமிழரசுக்கட்சி வாலிபர், இளந்தமிழர், மாதர் மகாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேசிய சாவகச்சேரித் தொகுதி தமிழரசு வாலிப முன்னணித் தலைவர், வழக்கறிஞர் திரு நா அருணுசலம், தனது தலைமையுரையில் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:- 'அகில இலங்கையின் ஒருமைப்பாட்டிற்குள்ளாகி தமிழினத்தை, சிங்களத்திற்குப் பேரம் பேசாமல் இலங்கையின் ஐக்கியத்தைப் பேணிக்காத்திடும் நோக்குடன், சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்துவதன் மூலம், இலங்கை தமிழினத்தின் தனித்துவத்தை உலகறியச்செய்ய முடியும் என்பதை எமது படித்த வாலிபர்களும் ஏனையோரும் நன்கு அறிந்துவிட்டனர்

இன்று எமது தொகுதியைப் பொறுத்த மட்டில் எமது நன்மைக்காக, எமது மொழி,கலை, கலாச்சார உரிமைகளுக்காக அடிபட்டு, உதைபட்டு, சிறை சென்று பல இன்னல்களைப்பட்டு, தியாக மனப்பான்மையின் சிகரத்தில் விளங்குபவர் கடமை வீரன் திரு வி என் நவரத்தினம் என்பதை எவரும் மறுக்கமுடியாது இவர் எமது தென்மராட்சி வாழ் அறுபத்திமூவாயிரம் தமிழருக்கும் வழிகாட்டியாக விளங்கும் தகைமை படைத்தவர் கடந்த14 ஆண்டுகளாக தமிழ்ப் பெருங்குடிமக்கள் காட்டிய பேராதரவுவிளங்க

### உதைபந்தாட்டம்

## இலங்கை இளைஞர் தோல்வி

மணிலா, ஏப் 19

மணிலாவில் நடைபெறும் ஆசிய இளைஞர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கலந்துகொண்ட இலங்கை இளைஞர் கோஷ்டி முதல்போட்டியில் ஈரான் இளைஞர்கோஷ்டியிடம் 8-0 கோல்களால் தோல்வியுற்றது. இடைவேளையின் போது ஈரான் 3-0 கோல்களைப் பெற்றிருந்தது.

ணியின்உபதலைவர் திரு எம் குணராஜா செயலாளர் திரு ராஜதுரை வரவேற்புரை நிகழ்த்திஞர்

## மீண்டும் கொடி பறந்தது

மட்டுவில், ஞாயிறு

முன்னுள் சாவகச்சேரி எம் பி திரு. வி என் நவரத்தினத்தின் காரில் ஒரு மாதத்தின்பின் மீண்டும் நேற்று தமிழரசுக்கட்சியின் கொடி பறக்க ஆரம்பித்தது.

'துப்பாக்கிக்குண்டுக்குத் தன்னை இரையாக்கித் தியாகியாகிவிட்ட கொடிகாமம் வேலுவின் பிரிவைத் தாங்க முடியாது வேதனை மிகுதியால் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்த எனது கட்சியின் கொடியை எடுத்துவைத்துவிட்டேன், அவருக்கு மரியாதைசெலுத்துவதற்காக உயிரினும் மேலான எனது கட்சியின் கொடியைத் தாழ்த்தினேன் இன்று கீரிமலையில் 'வேலு' ஐயாவின் அஸ்தியைக் கரைத்தபோது, நானும் கண்ணீரால் நனைந்த என் கட்சிக்கொடியை கடலில் குளிப்பாட்டி என் நெஞ்சத்து வேதனையையும் ஓரளவு கரைத்து மீண்டும் காரில் பறக்கவிட்டிருக்கிறேன்' என்று திரு. வி என் நவரத்தினம் சாவகச்சேரி கல்லடிமூட்டு தமிழரசு அலுவலகத்தின் முன் திரண்டிருந்த நூற்றுக்கணக்கான மக்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்

சாவகச்சேரி சந்தை மைதானத்தில் தியாகிகள் அரங்கில் இன்று ஆரம்பமான சாவகச்சேரி வாலிப முன்னணி மாதர், இளந்தமிழர் மாநாட்டிற்கு ஊர்வலமாகச் செல்வதற்குமுன்பாக இங்கு நடந்த கூட்டத்தில் பேசுகையில் திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினுர்.

வழக்கறிஞர் திரு. நா. அருணுசலம் தமது தலைமையுரையில் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் இப்போது விழிப்புணர்ச்சி ஏற்பட்டுவிட்டது இனி அவர்களை யாராலும் ஏமாற்ற முடியாது' என்முர்.


'ஈழநாடு'

இலக்கியப்போட்டியில் (காவியப்பிரிவில்) முதற்பரிசு பெற்ற வீர காவியம்

காரை சுந்தரம்பிள்ளையின்

சங்கிலியம்

நூல்வெளியீட்டுவிழா

★

'ஈழநாடு' அலுவலக முன்றிலில்

22-4-70

மாலை 5 மணிக்கு நடைபெறும்

யாழ் மத்திய, யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு இடையே அண்மையில் நடந்த கிரிக்கெட் மோதலைப்பற்றி ஈழநாடு 'ருப்பி' அட்வட்டைஸர்ஸ் ஆதரவுடன் நடாத்திய கிரிக்கெட் புதிரில் வெற்றிபெற்றேருக்குப்பரிசில்கள்வழங்கப்படும்,

★

இந்நூல் ஓர் 'ஈழநாடு' வெளியீடு

விலை: ரூ. 2-50 சதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வைமன் றேட், நல்லூரில் 2 கட்டிடக் காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. ஆர். இராசலிங்கம், யாழ் மெற்றல் தொழிற்சாலை, யாழ்ப்பாணம், தொலைபேசி இல. 7049. 2042

சுவாமிக்கு அலங்கரிக்கும் (சாத்துப்படி) சாமான்கள் ஒரு பகுதி விற்பனைக்குண்டு. நேரில் வரவும். பொ. நடராசசர்மா, ஸ்ரேசனடி, சுன்னுகம். 2046

65 மூன்று மாத (Sykes) இனப் பேட்டுக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. 53, கல்லூரி வீதி, வண்ணர்பண்ணை. 2054

அல்சேசன் நாய்க் குட்டிகள் நல்ல இனத்தைச் சேர்ந்தவை. சி. கந்தையா, மத்திய சங்கக்கடைக்கு அருகில் மானிப்பாய் றேட், ஆனைக்கோட்டை. 2055

சாவகச்சேரி - சங்கத்தானையில் புகையிரதநிலையம், டச்சு றேட் இரண்டுக்கும் மத்தியில் மூன்று பக்கங்களும் ஒழுங்கைகளால் சூழப்பட்ட நல்ல பிரயோசனங்கள் உள்ள 5 1/2 பரப்பு வீட்டு நிலம். முத்துவேலு, கலாபவனம், டச்றேட். 2050

காணி:

பளை - டி. ஆர். ஓ. கந்தோர் அமைந்துள்ள கட்டிடமும் அதைச் சேர்ந்த காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். S. சபாரத்தினம், பச்சிலைப் பள்ளி யூனியன், பளை. 2043

### தேவை

யாழ்ப்பாணம், மீசாலை, கொக்குவில், மானிப்பாய் - யாழ். பாலர் பாடசாலைகளுக்கு ஆசிரியைகள் தேவை. விண்ணப்பிக்கவும்: யாழ். இளைஞர் கழகம், 1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 2048

நிச்சாமம் ப. நோ. கூ. சங்கம் சங்கானை மனேஜர் ஒருவர் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராயிருத்தல் வேண்டும். அனுபவம் விசேட தகைமையாகக் கணிக்கப்படும். வயது 25—35, பிணைப் பணம் ரூபா 1000/- உறுதிப் பிணை ரூபா 2000/- முடிவு திகதி 27-4-70. விண்ணப்பங்கள் தலைவர், நிச்சாமம்

## மனேச்சர் தேவை

அச்சுவேலி கொலனி பல. நோ. கூ. சங்கத்துக்கு எஸ். எஸ். சி சித்தியடைந்தவரும் கூட்டுறவு தராதரப்பத்திரமுள்ளவரும், பண்டகசாலையுடன் வெங்காய வேலையிலும் அனுபவமுள்ள ஒருவர் தேவை. சம்பளம் 120/- விற்பனையாளர் மனேச்சரைப் பொறுத்தது. விற்பனையாளர் சம்பளம் ரூ. 60/- பிணைப்பணம் ரூ. 1000/- உறுதிப்பிணை ரூ. 2000/- லாபத்தை பொறுத்து உபகாரவேதனம் கொடுக்கப்படும். இம்மாதம் 25-ம் திகதிக்கு முன் "தலைவர்- அச்சுவேலி கொலனி ப. நோ. கூ. சங்கம்" என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

எஸ். வி. வேலுப்பிள்ளை,
2238 தலைவர்,

## கேள்வி விளம்பரம்

பரமானந்த ஸ்ரேடிய திருத்தல் வேலைக்கான சீல் வைத்த ரூபா 5000/-க்கு மேல் பதியப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கோப்பாய்க் கிராமசபைத் தலைவரால் கேள்விகள் 29-4-70 காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. இக்காரியாலயத்தில் கட்டுப்பணமாக ரூபா 25/-ம் பத்திரப்பணம் ரூபா 5-ம் கட்டியதன் பேரில் சபையால் வழங்கப்படும் படிவத்திலேயே மனுச்செய்தல் வேண்டும்.
2. பத்திரப்பணம் திருப்பித் தரப்படமாட்டா.
3. ஏற்கப்பட்ட கேள்விக்காரர் ஒரு வாரத்துள் ஒப்பந்தம் செய்து மூன்று மாதத்தில் வேலை முடித்து பாரம் தருதல் மிகமுக்கியமாகும்.
4. பத்திரம் 27-4-70 காலை 11 மணி வரை வழங்கப்படும்.
5. மேலதிக விபரங்கள் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

தி. பரமானந்தராசா,
தலைவர்.
கோப்பாய்க் கிராமசபை
அலுவலகம்,
கோப்பாய்,
19-4-70. 2239

### கல்வி

வெளி மாணவர்களுக்கான பாமசிஸ்ற் பரீட்சைக்கு வகுப்புகள் (External

## ஏழாலைக் கிராமசபை கேள்வி விளம்பரம்

ஒப்பந்தவேலை: புன்னாலைக் கட்டுவன் நாச்சிமார் கோவிலடி ஒழுங்கை.

2. கேள்விப்பத்திரம் கொடுத்தல்:-26-4-70 பி. ப 3 மணிவரை.
3. கேள்விப்பத்திரம் ஏற்றல்:- 27-4-70 மு. ப 11-00 மணிவரை.
4. கேள்விப்பத்திரப் பிணைப்பணம்:- ரூபா 50/-.
5. கேள்விப்பத்திரப் பணம்:- ரூபா 5/-.
6. விபரம் அறிதல் - 1. உ. உ. ஆ. காரியாலயம், யாழ்ப்பாணம்.
   2. கிராமசபைக்காரியாலயம், ஏழாலை.

(ஒப்பம்) க. சிவகுரு
தலைவர்
கிராமசபை
18-4-70 ஏழாலை.
2240

## கேள்வி விளம்பரம்

### பனங்காமம் கிராமசபை

நட்டாங்கண்டல் கிழக்கு றேட்டிற்கு கல்லுப்போட்டு தார் ஊற்றி வேலை செய்வதற்கும், மூன்று முறிப்பு, கண்ணகை அம்மன் கோவிலடியில் மடம் அமைப்பதற்கும் ரூ 5000/- க்கு மேல் பதிவுள்ள ஒப்பந்தகாரர்களிடம் இருந்து 1970-ம் ஆண்டு சித்திரை மாதம் 30-ம் திகதி காலை 10 மணி வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ரூபா 10/- கி. ச. கந்தோரில், கந்தோர் நேரங்களில் 27-4-1970 நண்பகல் 12 மணி வரைக்கும் செலுத்தி கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரப் பிரதி ஒன்று மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு கி. ச. தலைவருக்கு அனுப்பும் அதே திகதியில் அனுப்ப வேண்டும். தான் ஒப்பந்தக்காரன் என்று நிரூபிப்பவர்க்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

மேற்கொண்ட விபரங்கள் எதுவும் கி. ச. கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்)
சூ. தம்பையா, ஜே. பி.
கி. ச. தலைவர்,
பனங்காமம்,
நட்டாங்கண்டல்.

இ. ச. பணிமனை,
நட்டாங்கண்டல்,
மாங்குளம், 16-4-1970.
2241

கரபந்தாட்டம்

# தம்பாட்டிக் கோஷ்டி மகத்தான வெற்றி

ஊர்காவற்றுறை, ஞாயிறு

புது வருடத்தையொட்டி புளியங்கூடல் மகாமாரி அம்பாள் கோவில் வீதியில் நடைபெற்ற கரபந்தாட்டப்போட்டியில் ஊர்காவற்றுறை தம்பாட்டிக் கோஷ்டியும், ஊர்காவற்றுறை செண் ஜேம்ஸ் கோஷ்டியும் கலந்துகொண்டன.

இரு தரப்பினரும் திறமையாக விளையாடினராயினும், தம்பாட்டிக் கோஷ்டியினர் முதல் இரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றனர்.

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட இப்போட்டியில் அடுத்து மூன்று தடவையாகத் தம்பாட்டிக் கோஷ்டியினர் வெற்றி பெற்று திரு. நவரத்தினம் கேடயத்தைப் பெற்றுக் கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தாச்சி விளையாட்டில் காந்திஜி சனசமூக நிலையக் கோஷ்டி வெற்றிபெற்று அமரர் செல்லத்துரை ஞாபகார்த்தக் கேடயத்தைப் பெற்றுக்கொண்டது.

செற்றப் முறை கரபந்தாட்டத்தில் ஊர்காவற்றுறை செண் ஜேம்ஸ் சனசமூக நிலையக்கோஷ்டி வெற்றிபெற்று அமரர் சிற்றம்பலம் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்தைப் பெற்றது.

ஆசிரியர் திரு பொன்னுச்சாமி தலைமையில் நிகழ்ந்த பரிசளிப்புக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. இராசையா கலந்து கொண்டு வெற்றிபெற்ற வீரர்களைப் பாராட்டிப் பேசினர்.

திரு. இ. மாணிக்கம் ஜே. பி. வெற்றிக் கேடயங்களை வழங்கினர்.

# சுன்னுகம் பொலிஸ்பகுதி விளையாட்டுப் போட்டி முடிவுகள்

உடுவில், ஞாயிறு

புத்தாண்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு சுன்னுகம் பொலிஸ்பகுதியால் வலி வடக்கு உடுவில் பகுதி விளையாட்டுச் சங்க ஆதரவில் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்விபரம் வருமாறு:

26 மைல் சைக்கிள் ஓட்டம் 'ஈழநாடு' வெற்றிக்கிண்ணம்:- ஏ. சுந்தரேஸ்வரன் (கட்டுவன்), ஏ. செல்வராஜன் (காங்கேசன்துறை), எஸ். மகேந்திரன் (அளவெட்டி).

16 மைல் மரதன் ஓட்ட போட்டி:- ரி. ஆனந்தராசா (காங்கேசன்துறை, வி. செல்வராஜா (இணுவில்), ரி. பொனே (உடுவில்)

10 மைல் சைக்கிள் ஓட்டம்- (16 வயதுக்குட்பட்ட ஆண்கள்)- என். இராசையா (தெல்லிப்பளை), எம். மகேந்திரன் )இணுவில்), எம். அருமைத்துரை (உடுவில்).

10 மைல் சைக்கிள் ஓட்டம் பெண்கள்- ரி. பத்மாவதி (சுன்னுகம்), வி. லில்லிமலர் (உடுவில்), ரி. கனகேஸ்வரி (சுன்னுகம்).

சிறுவர் சைக்கிள் ஓட்டம்- ரி. ஜெயராஜா (உடுவில்), என். துஷ்யந்தன் (தெல்லிப்பளை), கே. வசந்தகுமார் (உடுவில்).

கரபந்தாட்டம்- இளந்தென்றல் மன்றம் (சுன்னுகம் . ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் இணுவில்).

தாச்சிப் போட்டி- மல்லவத்தை விளையாட்டுக்கழகம் (உடுவில்) அண்ணு விளையாட்டுக் கழகம் (இணுவில்).

போர்த்தேங்காய் அடித்தல்- கே. கணேசு (அளவெட்டி) கே. பூபாலு (உடுவில்), கே கந்தையா (உடுவில்).

—

உடுவில், ஞாயிறு

வலி-வடக்கு உடுவில்பகுதி விளையாட்டுச் சங்க ஆதரவில் நடைபெறும் மென்பந்துக் கிரிக்கெட் போட்டிகள் இம்மாதம் 23-ம் திகதி முதல் ஆரம்பமாகின்றன. இதற்கான வெற்றிக் கிண்ணத்தை வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் வழங்கியுள்ளார்.

இணுவில், உடுவில், சுன்னுகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் ஆகிய கிராமசேவையாளர் பிரிவில் உள்ளோர் இப்போட்டியில் பங்குபற்றுவர்.

## மரதன் ஓட்டப் போட்டி முடிவு

[illegible] ஞாயிறு

சித்தன்[illegible]ணி இளைஞர்

## பேச்சுப் போட்டி

உதைபந்தாட்டம்

# பொலிஸ் வெற்றி

யாழ்ப்பாணம் திங்கள்

யாழ். மாவட்ட அரசாங்க விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், யாழ். கச்சேரிக் கோஷ்டியை யாழ். பொலிஸ் கோஷ்டி மிக இலகுவாக வெற்றி பெற்றது.

இப் போட்டி ஆரம்பமாகி இடைவேளைவரை இரு கோஷ்டிகளும் தமக்கு கிடைத்தகோல்கள் போடும் மிக இலகுவான கட்டங்களை நழுவவிட்டவண்ணமே இருந்தன. இடைவேளைவரை இரு கோஷ்டிகளும் கோல்கள் எதுவும் போடவில்லை.

இடைவேளையின் பின் பொலிஸ் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் அடுத்தடுத்து மின்னல் வேகத்தில் கோல்களைப் போட்டவண்ணமே இருந்தனர். வீரர்கள் அன்வர்-4, கருணதாசா-3, அன்ரனி-1 முறையே கோல்களைப் போட்டனர். கச்சேரிக் கோஷ்டியின் கோல்காப்பு வீரர் சண்முகசுந்தரம் மிகசாதூரியமாக பல கோல்களைத் தடுத்து ரசிகர்களின் பாராட்டுகளைப் பெற்றார். ஆட்டமுடிவில் பொலிஸ் கோஷ்டி 8—0 கோல்களால் வெற்றி பெற்றது.

யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. செபஸ்தியாம்பிள்ளை மத்தியஸ்தம் வகித்தார். (தே. நி)

......

த. கா. வாலிப

## விளையாட்டுப் போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் புங்குடுதீவுக் கிளையின் புத்தாண்டையொட்டி நடாத்திய சைக்கிளோட்ட - மரதனோட்ட- அஞ்சலோட்டப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

அஞ்சலோட்டம்: (நயினுதீவு) து. தங்கராசா (ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம், புங்குடுதீவு) அகஸ்தீன் சேவியர் (முச்சுடர் முன்னணிக் கழகம், நெடுந்தீவு) நா. [illegible]வேலு (நயினுதீவு 5-ம் [illegible]ட்டாரம்)

மாணவர் சைக்கிள் ஓட்டம் : (புங்குடுதீவு) எம். ஜே. எமலின்சியாஸ், (நாரந்தனை வடக்கு) கே. கந்தசாமி (புளியங்கூடல்), கி. [illegible]ருளப்பு (புங்குடுதீவு 2-ம்

## திருக்கேதீஸ்வர பூங்காவன

உரும்பராய், திங்கள்

உரும்பராய்இந்துக்கல்லூரியினரால் வருடந்தோறும் நடாத்தப்படும் திருக்கேதீஸ்வர பூங்காவனத்திருவிழா நாளை மாலை ஐந்துமணியளவில் மேற்படி ஆலயத்தில் நடைபெறும்.

இன்னிசையும் மேளக்கச்சேரியும் இடம்பெறும் இத்திருவிழாவிற்கு போவதற்காக மாணவர்களுக்கு விசேட பஸ் இந்துக்கல்லூரியினரால் ஒழுங்கு செய்யப்பட்டுளது.


**வெலிசினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் - ராஜ்ஸ்ரீ
நடித்த
**நீயும் நானும்**

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30 9-30
பிரிப்போயா, போயா 2-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
**குல விளக்கு**

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7&9-45 p. m.
Prepoya, Poya 4 shows
THEY CAME TO
ROBLASVEGAS
(colour)

**REGAL** JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Poya, pre poya 4 shows
James Garner
Jason Robards
in
HOUR OF THE GUN
(Panavision -Color)

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த !
**ஹரிச்சந்திரா**

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, கே ஆர் விஜயா
நாகேஷ்-பாலாஜி-பேபி ராணி
நடித்த
**திருடன்**

யாழ். வின்ஸர் திரையில்


"குழந்தைகளிடையே

## சைவ உணர்வை வளர்க்க வேண்டும்"

கோப்பாய் ஞாயிறு

ஞானசம்பந்தர் விழாவை முன்னிட்டு கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தால் வழமைபோல் சமய அறிவுப்போட்டிக்கான கேள்விகள் அச்சாகி இவ்வருடமும் வெளியிடப்பட்டுள்ளது.

போட்டியில் வெற்றிபெறுவோருக்கு ரொக்கப் பரிசுகளும் புத்தகப்பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்,

கிராமாபிவிருத்தி மேற்பார்வையாளர் திரு, கே. எஸ். முத்துவேலு இவ்வைபவத்தில் பேசியதாவது:

'எமது சமயம் ஒருகாலத்தில் அருகி வந்த நேரம் சமயகுரவர்கள்தோன்றினர் அன்று மறுசமய ஆதிக்கத்திலிருந்து சைவத்தைக்காத்த பெருமை அவர்களையே சாரும். அவர்கள் காட்டிய வழியிலேயே இன்றும் சைவ சமயத்தைக்காக்க சைவ ஸ்தாபனங்கள் முன்வருதல் அவசியம். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சைவ உணர்ச்சியை இளம்வயதில் உருவாக்கவேண்டும் சைவ உண்மைகள் போதிக்கப்படுதல் அவசியம்"

வலி-கிழக்குக் காரியாதிகாரி திரு வ கந்தப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மன்றக் கூட்டுப்பிரார்த்தனைச் சபைத் தலைவர் திரு வி எஸ் கணேசசுந்தரனின் வில்லிசைக் கச்சேரி இடம்பெற்றது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவம் விசேட தகைமை யாகக் கணிக்கப்படும். வயது 25—35, பிணைப் பணம் ரூபா 1000/-உறுதிப் பிணை ரூபா 2000/- முடிவு திகதி 27-4-70. விண்ணப் பங்கள் தலைவர், நிச்சாமம் ப. நோ. கூ. சங்கம், சங் கானைக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். 2051

### கல்வி

வெளி மாணவர்களுக் கானபாமசிஸ்ற் பரீட்சைக்கு வகுப்புகள் (External pharmacist examination) விப ரங்களுக்கு விக்னேஸ்வரன், 7, பழம் ரோட், கந்தர் மடம், யாழ்ப்பாணம். 2052

பனங்காமம், நட்டாங்கண்டல்,

இ. ச. பணிமனை, நட்டாங்கண்டல், மாங்குளம், 16-4-1970. 2241


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## மரதன் ஓட்டப் போட்டி முடிவு

...ழிபுரம், ஞாயிறு

சித்தன்...ணி இளைஞர் முன்னேற்றக் கழக 14ம் ஆண்டு நிறைவு விழாவை யொட்டி நடைபெற்ற மர தன் ஓட்டப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் விப ரம்:

14 வயதுக்கு கீழ்ப்பட்ட வர்: பா ரவீந்திரன், இ. தவராஜா, அ. ஜெயக் குமார், கு. சிவகணேசன்.

14 வயதுக்கு மேற்பட்ட வர்: சு. சிவராஜா. ச, தன பாலன். இ. செல்வத்துரை, செ. கனககந்தாம்.

புன்னாலைக்கட்டுவன் ஆகிய கிராமசேவையாளர் பிரிவில் உள்ளோர் இப்போட்டி யில் பங்கு பற்றுவர்.

## பேச்சுப் போட்டி

சுழிபுரம், ஞாயிறு

காலஞ்சென்ற வைத்தியர் ஏ. கைலாயபிள்ளையின் முத லாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவரது நினைவுக் கிண்ணத்துக்கான பேச்சுப் போட்டி ஒன்றை சுழிபுரம் கிராம சபை எல் லைக்குட்பட்ட மாணவ மாணவிகளுக்கிடையே நடா த்த வழக்கம்பரை தமிழ் மன்றத்தினர் ஏற்பாடு செய்துவருகின்றனர்

மாணவர் சைக்கிள் ஓட் டம்: (புங்குடுதீவு) எம். ஜே. எமலின்சியாஸ், (நாரந் தனை வடக்கு) கே. கந்த சாமி (புளியங்கூடல்), கி. ...ருளப்பு (புங்குடுதீவு 2-ம் ...ட்டாரம்).

வயது வந்தோர் சைக்கிள் ஓட்டம் (ஊர்காவற்றுறை): வெ. கந்தலிங்கம் (புளியங் கூடல், ச. லீனப்பு (நாரந் தனை தெற்கு), க. முத்துக் குமாரு (புங்குடுதீவு).

மரதன் ஓட்டம் (புங்குடு தீவு): எஸ். பிரான்சிஸ் (ஊர்காவற்றுறை), து. தங் ராசா (புங்குடுதீவு), பெ கென்றி (புங்குடுதீவு).

முதலிடம் பெற்றவர்க ளுக்கு தங்கப்பதக்கமும் ஏனையோர்க்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

திரு.சு.கு. குழந்தைவேலு தலைமையில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் திரு மதி என். ரி. சிவஞானம் பரிசுகளை வழங்கினார்.

......

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 7-ம் திகதி [20-4-70]

**சோதிடக்கலாநிதி திருமலை க, வேலுப்பிள்ளை**

**மேஷம்-** அரசபயத்திற்கு இடமுண்டு. வழக்கு விவ காரங்களில் மாட்டிக்கொள்ளவேண்டாம். மின்னியல் பொறியியல் பகுதிகளில் கடமையாற்றுபவர்கள் மிகவும் கவனம் செலுத்தவும்.

**ரிஷபம்-** அன்புக்கரங்கள் அணைக்கும்.. அதிர்ஷ்ட தேவதையின் பார்வையும் பதியலாம். தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும்.

**மிதுனம்-** தொழில்துறையில் நல்மாற்றங்கள் ஏற் படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாக கிடைக் கும். நண்பர்கள் மூலம் புதிய தொடர்புகள் ஏற்படும் இன்று சுபதினம்.

**கடகம்-** இளமைநினைவுகள் நிழலாட்டம் போடும் காதல்கணை தாக்கும், கவிஞர்கள் கௌரவிக்கப்படு வார்கள். பாலுணர்ச்சிமேலிடும். வாழ்க்கையில் முன் னேற்றம் தென்படும்.

**சிம்மம்-** எதிர்பாராத செலவினங்கள் பாதிக்கப்படு வீர்கள். கடன்வாங்கவும் நேரிடலாம். சமீபத்தில் நடை பெற்றுமுடிந்த சம்பவமொன்று மனதிற்கு வேதனையைத் தரலாம். தொழிலிலும் தொல்லை உண்டு.

**கன்னி-** இன்னலின் பின்னலால் இதயம் வேதனைப் படும். வீட்டில் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கலாம். நண்பர்களுக்கு மத்தியில் அபிப்பிராயபேதம் தோன்றக் கூடும். உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

**துலாம்-** கடந்துபோன சம்பவம் ஒன்று குறித்து கவலைகள் அதிகமாகும், பலவழிகளிலும் பணம் செல வாவதற்கு இடமுண்டு. சிறிய தவறுதல்களுக்கு கூட பெரிய தண்டனை கிடைக்கலாம். மனத்திடம்வேண்டும்

**விருட்சிகம்-** வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும் எதிலும் தாக்கமனப்பான்மை உருவாகும். சிநேகிதர் வழியால் கவலைகள் தோன்றக்கூடும். விவசாயிகளாயின் ஏமாற்றத்துக்கு இடமுண்டு. நிதானம் நன்று.

**தனுசு-** கற்றதால் பயன் கைமேல் கிடைக்கும். தாய் வழிச்செய்தியும் கிடைக்கும். கவிஞர்கள் ஆதரவு தருவர். தொழில்புரியும் இடத்தில் செல்வாக்கும் பெருகும்.

**மகரம்-** அறவழியில் நாட்டம் செல்லும். வேதாந்த சிந்தனைகள் தலைதூக்கும். இரக்கசிந்தையின் மூலம் செலவுண்டு. கற்ற மனிதர்களின் வாழ்த்து கண்டிப் பாகக் கிடைக்கும்.

**கும்பம்-** தூரத்துப் பயணம் துயரம் தரலாம். வரு மானத்தில் வீழ்ச்சி தென்படும், வைத்தியச்செலவுகளுக்கு இடமுண்டு. இன்று வருத்தம் வரினும் பெருமுறையில் கவனிக்கப்படல் நன்று.

**மீனம்-** குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும். இசைத்துறையில் அதிக ஆர்வம் ஏற்படும். பிள்ளை களினல் பெருமைக்கு இடமுண்டு.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**திங்கள் 20—4—70**

(செய்திகள்: காலை 6 45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, -30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரை கானம், 8-00 செய்திச்சுருக் கம், 8-03 நிலையஒலிப்பதிவு கள், 8-15 இஸ்லாமியகீதங் கள், 8-30 செய்திச்சுருக் கம்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 அரங்கேற் றம், 1-30 செய்திச்சுருக் கம்.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலி பரப்பு, 5-00 செய்திச்சுருக் கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வயலின், 7-45 லெனின் நூற்றாண்டு நிகழ்ச்சி, 8-00 செய்திச்சுருக் கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.


உங்கள் புடவைகள் நிலையான மெருகுடன் திகழ இதோ

பேயர் கசெல்லா

அக்ரமின் லிவாபிக்ஸ்

இண்டான்த்ரன் இன்டோகாபன

BAYER


பிளாங்கோபோர் ரெலோன்

சோலிடாடிஸோல்

CASSELLA

ரெசோலின் சீரியஸ் சுப்பா

பொலிசின்தரன் போலமின்



உங்கள் பருத்தி, வலிந்தெட்டிக் புடவைகளுக்கு நிலையான மெருகூட்டுவதற்காக, உலகப்பிரசித்திபெற்ற, பெயர் கசெல்லா, நிறம் மங்காத சாயப்பொருள் பசை மற்றும் சுணைப்பொருள்களை வழங்குகின்றார்கள்.

உங்கள் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்து டன் நிறுவப்பட்ட எமது நவீன ஆய்வு கூடச் சேவையை பயன் படுத்திக்கொள்ளுங்கள்.

HAYLEY'S

ஹேலிஸ் லிமிட்டெட்

400, டீன்ஸ் ரோட். கொழும்பு-10. தொலைபேசி: 96333.



திருடன்

யாழ். வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

சிவாஜிகணேசன் — பாரதி

மனோகர், நிர்மலா, ஓ. ஏ. கே. தேவர்

ஹரி கிருஷ்ணன்

மற்றும் பலர் நடித்த

தங்கச் சுரங்கம்

(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

வெற்றிமுரசுகொட்டும் 99வது தினம்

கெப்பிட்டல் (கொழும்பு)


வெலிங்டன் யாழ்ப்பாணம்

மகத்தான 68-வது தினம்

திவசமி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.

(போயா, பிரிப்போயா காலை 10-30)

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற வெற்றிச்சித்திரம்



சிவாஜிகணேசன் - பத்மினி

பாலையா, நாகேஷ், நம்பியார்

மற்றுபலர் நடித்த

தில்லானா மோகனம்பாள்

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)

ஆகிய திரைகளில்

முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ்

ஜெயபாரதி, நம்பியார், ஏ. கருணாநிதி

நடித்த

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

சுபதினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாஜிதளபதி, பொலிஸ் அதிபர் உட்பட 10 பேருக்குத் தூக்கு

## புரட்சிச்சதி வழக்கில் ஸியாராலியோன் நீதிமன்றம் தீர்ப்பு

லண்டன், ஏப். 19

சியாராலியோன் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்த சியாராலியோன் முன்னாள் இராணுவ தளபதிக்கும் மற்றும் 9 பேருக்கும் வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம் மரணதண்டனை விதித்து இன்று தீர்ப்பளித்தது.

முன்னாள் பொலிஸ் கமிஷனர், முன்னாள் அமைச்சர் ஒருவர் ஆகியோரும் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள்.

1967-ம் ஆண்டில் சியாராலியோன் அரசாங்கத்தை பலாத்காரத்தினால் கவிழ்க்கச் சதி செய்ததாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அமெரிக்க-ரஷ்ய பேச்சுவார்த்தையில்

## அணு ஆயுதம் கட்டுப்படுத்தும் திட்டம்

நியுயோர்க், ஏப். 19

அணு ஆயுதங்கள் விநியோகிப்பதைக் கட்டுப்படுத்தும் திட்டம் ஒன்றை அமெரிக்கா ரஷ்யாவிடம் சமர்ப்பிக்கவிருக்கிறது. இவ்விருநாடுகளுக்குமிடையில் இதுசம்பந்தமாக நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையின் போது அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனின் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

விரைவில் நடைபெறவிருக்கும் ரஷ்ய அமெரிக்க பேச்சுவார்த்தையில் இடம்பெறும் எவ்வித முடிவும் அறிவிக்கப்பட மாட்டாதென்றும், இவை ரகசியமாகவைத்திருக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மாநாட்டில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகள் ரகசியமாக வைத்திருக்கப்படவேண்டும் என்ற ரஷ்யாவின் உடன்படிக்கையின்படி இதுநடைபெறுவதாகக் கூறப்பட்டது. இது சம்பந்தமாக நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இருநாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு பேசினர்.

## நினைவுவிழா கொண்டாடப்படும்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ்மொழியைத் திறம்படப் போதித்த ஆசிரியர்களுக்கு விழா எடுப்பதும் நூல் வெளியிடுவதும் மாணவர்களின் முக்கிய பணியாகும் என்று வைத்திய கலாநிதி திரு. க. கங்காதரம்பிள்ளை குறிப்பிட்டார்.

சித்தங்கேணி சைவ ஆங்கில வித்தியாசாலையில் 40 வருடங்களாகக் கல்வி கற்பித்து 'தமிழ் மாஸ்ரர்' எனப் புகழ்பெற்ற பண்டிதர் திரு. பே. சுப்பிரமணியத்திற்கு நினைவுவிழா எடுப்பது சம்பந்தமாக பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். திரு. க. பேரம்பலம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

விழாவினை அடுத்த மாதம் சித்தங்கேணியில் சைவ ஆங்கில வித்தியாசாலையில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## சூ-என்-லாய் கொரியா விஜயம்

யொங்கியாங், ஏப். 19

சீனப் பிரதம மந்திரி திரு. சூ-என்-லாய் அண்மையில் வடகொரியாவிற்கு விஜயம் செய்தார். கொரியா பிரதமரின் அழைப்பை ஏற்று உத்தியோகபூர்வமற்ற விஜயத்தை இங்கு மேற்கொண்ட சூ-என்-லாய்-க்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

சூ-என்-லாயை வரவேற்றுப் பேசிய கொரியாப் பிரதமர், 'சீனப் பிரதமரின் விஜயம் அமெரிக்கரால் கஷ்டப்படும் கொரியா மக்களுக்கு ஒரு புத்துணர்ச்சியை கொடுத்திருப்பதாகவும் சொன்னார். சூ-என்-லாய் எமது நாட்டில் குறுகிய நாட்கள் மட்டும் தங்கியிருந்த போதிலும் இரு நாடுகளுக்குமிடையிலுள்ள சில பிரச்னைகள் சம்பந்தமாக தாங்கள் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் கொரியாப் பிரதமர் கூறினார். தாங்கள் இப்பேச்சுவார்த்தையில் திருப்தியடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தஞ்சைப்பெரிய கோயிலில் ராஜ ராஜசோழன் சிலை

தஞ்சாவூர், ஏப்ரல் 19

தஞ்சை பெரியகோயிலாகிய பிரகதீஸ்வரர் ஆலயத்தில் 7 அடி உயரத்தில் பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் வெண்கலத்தினால் செய்யப்பட்ட ராஜ ராஜ சோழனின் சிலையை நிறுவுவதற்கு தொல்பொருள் ஆராய்ச்சி இலாகா மறுத்ததன் பேரில் தமிழ்நாடு முதலமைச்சர் திருமதி இந்திரா காந்திக்கு இதுபற்றிக் கடிதம் எழுதினார்.

தற்காலத்தில் நிறுவப்படும் இச்சிலையைப்போலவே பிரகதீஸ்வரர் ஆலயமும் அதன் கல்வெட்டுகளும் ராஜ ராஜ சோழனுக்குச் சிறந்த நினைவுச் சின்னமாக விளங்குகின்றன என்றும் அத்துடன் புதிதாக வைக்கப்படும் சிலை ஆலயத்தின் பழைய பெருமைக்கும்

காங்கேசன்துறையில்

## ஆஸ்திரேலிய மாவுக்கப்பல்

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறைமுகத்தில் மாவுக்கப்பல் ஒன்று வந்து சேர்ந்துள்ளது.

இவ்வருடத்தில் இத்துறைமுகத்துக்கு வந்த இரண்டாவது கப்பலான இதில் ஆஸ்திரேலியாவில் இருந்து 11,799 தொன் மாவு வந்துள்ளது.

இம்மா இறக்குமதி வேலைகளை வடமாகாண கூட்டுறவுத் துறைமுக சமாசம் செய்து வருகிறது. இன்னும் சில வாரங்களில் வேலைகள் பூர்த்தியடைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## குற்றத்தை ஏற்றார்

### தீர்ப்பு 25-ல்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

கம்பர்மலையைச் சேர்ந்த க. பஞ்சலிங்கம் என்பவர் வல்வெட்டியைச் சேர்ந்த சி. சிவகோபால் என்பவரை வெட்டிக் காயப்படுத்தியதாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே கை அடையாளம் கொடுக்கும்படி எதிரிக்கு உத்தரவிட்ட மாஜிஸ்டிரேட் தீர்ப்புக் கூறுவதை இம்மாதம் 25-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## 500 வலைகள் வந்தன

வல்வெட்டித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை மீன்பிடிக் கூட்டுஸ்தாபனத்திற்கு ஏற்பட்ட வலைத் தட்டுப்பாட்டை யொட்டி பருத்தித்துறை முன்னாள் எம். பி. திரு. கே. துரைரத்தினம் மீன்பிடி கூட்டுத்தாபனத் தலைவருக்குச் செய்தமுறைப்பாட்டைத் தொடர்ந்து 500 வலைகள் உடன் அனுப்பி வைக்கப்பட்டன. விரைவில் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக மேலும் வலைகள் அனுப்பி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

## தேவாலயம் திறக்கப்பட்டது

# "ஸ்ரீமாவோவின் மாமனார் இன்று யு. என். பி. மேடையில்; ஏன்?"

## அமைச்சர் பிரேமதாசா விளக்குகிறார்

கோட்டை, ஞாயிறு

'இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகிக்கும் திரு எஸ். எஸ். ரத்வத்தை, திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் மாமனாவர். இப்படியானதொரு பெரிய மாற்றது ஏன் ஏற்பட்டது? திருமதி பண்டாரநாயக்காவின் சொந்த மாமனாரே இப்படி யு.என்.பி.மேடையில்தோன்றக் காரணம் என்ன? தனது மருமகள் மார்க்ஸிஸ்டுகளுடன் ஒட்டி உறவாடி இணைந்திருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை'.

டெடிகமவில் நடந்த யு.என்.பி.தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா பேசுகையில் இப்படிக் கூறினார்.

பிரதமர் திரு. டட்லிசேனநாயக்காவின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் பேசுகையிலேயே மேற்கண்டவாறு சொன்னார்.

டெடிகம தொகுதியில் தம்புகலவில் இக் கூட்டம் நடந்தது. அமைச்சர் திரு. பிரேமதாசா தொடர்ந்து பேசுகையில், பிரதமர் திரு. டட்லிசேனநாயக்காவுக்கு டெடிகமத் தொகுதியில் அளிக்கப்படும் வாக்குகள் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக போடப்படும் வாக்குகளாகும். அவருக்குப் போடப்படும் ஒவ்வொரு வாக்கும் தேசிய ஒற்றுமைக்கும் தேசிய முன்னேற்றத்துக்கும் அளிக்கப்படும் வாக்குகளாகும் என்று அவர் கூறினார்.

நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்யவும், பொருளாதார சுதந்திரத்தை அனுபவிக்க அளிக்கப்படும் வாக்குகளாகும் என்றும் அமைச்சர் சொன்னார்.

# 'மக்களுக்கு சிறந்தசேவை ஆற்றியது யு.என்.பியா, சுதந்திரகட்சியா?'

## எடைபோட்டுப் பாருங்கள்என்கிறார் பிரதமர்

ஹோமஹம, ஞாயிறு

'யு.என்.பி.யும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் 8 ஆண்டு காலம் ஆட்சி செலுத்தியிருக்கிறது. இந்தக் காலத்தில் யார் சிறந்த முறையில் ஆட்சி செலுத்தியிருக்கிறார்கள் என்பதை எடைபோட்டுப் பார்ப்பதற்கு மக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது.

ஹோமஹம தொகுதியில், யு.என்.பி. சார்பில் போட்டியிடும் திரு காமினி ஜெயசூரியாவை ஆதரித்து நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

ககாதுடுவா என்ற இடத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

பிரதமர் பேசுகையில் கூறியதாவது:- இந்தத் தேர்தலில் போட்டியிடும் இரு பெரும்கட்சிகளின் கொள்கைகளை நெஞ்சியில் நிறுத்தி எடைபோட்டுப் பார்த்து வாக்களிக்க வேண்டும். ஒரு கட்சி யு. என். பி. நீண்டகாலமாக இந்நாட்டில் இயங்கி வருகிறது. பலமுறை ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருக்கிறது. அடுத்த கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி திருமதி ஸ்ரீமாவோவின் தலைமையில் இயங்குகிறது.

1947ம் ஆண்டு யு.என்.பி. முதல்தடவையாக ஆட்சி அமைத்தது. ஆட்சிஅமைப்பு ... ஒரு வருடத்துக்கு ...னதாக யு.என்.பி. அங்கு ... பட்டது. டி. எஸ். சேனநாயக்கா தலைமையிலான யு. என், பி. ஆட்சியாளர் 'நாங்கள் சுதந்திரமடைந்துவிட்டோம்' என்று கூறியது அதன்பின்னர் 1965ம் ஆண்டுவரை சுதந்திரக்கட்சியும் யு. என். பி. யும் 9 ஆண்டுகாலம் ஆட்சி புரிந்து இருக்கிறது. ஆகையால் யார் சிறந்தஆட்சியை நடத்தியிடுக்கிறார்கள் என்பதை மக்கள் எடைபோட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

வேலைதருவதாகக் கூறுவது

## "கூட்டாட்சியினரின் வாக்குவேட்டை தந்திரம்"

— அமைச்சர்

மாவனெல்லை, ஞாயிறு

'ஜி.ஸி.ஈ.படித்த வாலிபர்களுக்கும், பட்டதாரிகளுக்கும் வேலை தருவதாக கூட்டாட்சியினர் நாடுமுழுவதும் உறுதியளித்துவருகிறார்கள். ஆனால் அவர்கள் வாக்குவேட்டையாடுவதற்காகவே இந்தத் தந்திரத்தைக் கையாள்கிறார்கள்'.

சமூக சேவை அமைச்சர் திரு. அசோகா கருணரத்தின புதிய பஸ்சேவையொன்றை இங்கு ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் திரு. அசோகா கருணரத்தின மேலும் பேசுகையில், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒரு சில மணி நேரத்தில் ஒழித்துக்கட்டிவிடமுடியாது. தொழிற்சாலைகளையும், கைத்தொழில் நிலையங்களையும் ஆரம்பிப்பதன் மூலமே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துக் கட்டலாம். மகாவலிகங்கை திட்டம் செயற்பட ஆரம்பித்து விட்டால் ஆட்சிமன்ற உறுப்பினர்களை நம்பியிராமலே வேலை பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்' என்றார்.

ஜி. ஜி. கேட்கிறார்:

# "தமிழரசுக் கட்சி

# 'அரபுப் பகுதியிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும்'

## ஐ.நா.சபையில் சீனாவுக்கு இடம்வேண்டும்

### மண்டலசார்பற்ற நாடுகள் தீர்மானம்

தாருஸ்ஸலாம், ஏப். 19

1967-ம் ஆண்டில் நடைபெற்ற இஸ்ரேல்-அரபு யுத்தத்தில் கைப்பற்றப்பட்ட பிரதேசத்திலிருந்து இஸ்ரேல் வெளியேறவேண்டும் என்று கோரும் தீர்மானம் தாருஸ்ஸலத்தில் நடைபெற்ற மண்டலசார்பற்ற நாடுகளின் 3-வது மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. கடந்த 5 நாட்களாக நடைபெற்ற மகாநாடு நேற்றுடன் முடிவடைந்தது.

தென்வியட்நாம் புரட்சி அரசாங்கத்துக்கு இடமளிக்கும் பிரச்னையை லுஸாகாவில் நடைபெறவிருக்கும் உச்சிமகாநாட்டுக்கு விடுவதென முடிவுசெய்யப்பட்டது.

வியட்நாமிலிருந்து பிறநாட்டு இராணுவம் நிபந்தனையில்லாமல், வியட்நாம் மக்கள் அனுமதியுடன் வாழ வழிவகுக்கும் முகமாக வாபஸ் பெறவேண்டும் என்ற தீர்மானமும் இங்கு நிறைவேறியது.

தென் கிழக்காசியாப்பிரச்னைகள் சம்பந்தமாகவும் பேசப்பட்டது. வேறு நாடுகளின் தலையீடுகளுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

ஐ நா. சபையில் சீனாவுக்கு இடமளிக்க வேண்டும்என்ற தீர்மானமும் நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நாடுகளின் 3-வது மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. கடந்த 5 நாட்களாக நடைபெற்ற மகாநாடு நேற்றுடன் முடிவடைந்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப்பகுதியிலிருந்த இஸ்ரேல் முற்ருக வாபஸ் பெறவேண்டும் என்று மகாநாடு இஸ்ரேலைக் கேட்டுக்கொண்டுள்ளது.

மண்டல சார்பற்ற நாடுகளின் 4-வது மகாநாட்டை செப்டம்பர் மாதத்துக்கு முன்னர் ஸாம்பியா தலைநகரான லுஸாகாவில்நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தலையில்லாமல், வியட்னும் மக்கள் அனுமதியுடன் வாழ வழிவகுக்கும் முகமாக இடமளிக்க வேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேறியது.

## 'அனுதினமும் துதிபாடினுல் முத்தியின்பத்தை அடையலாம்'

யாழ்ப்பாணம், திங்கள்

கைதடி இந்துவாலிபர் சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழா கைதடி மத்தி சேது காவலர் வித்தியாசாலை மண்டபத்தில் திரு. சு. கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது.

''உலக முய்ய நன்னெறி காட்டினுர்கள் நம் மூதாதையோர். அச்சான்ருேர் எமக்கு விட்டுச்சென்ற அரிய ஞானப் பொக்கிஷங்களெல்லா வற்றையும் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு எம்முடையது. சுதந்திரமடைந்த நாம் சுயாதீனமாக நம்சமய தை அபிவிருத்திசெய்து சமயப் பணியை ஏற்றல் வேண்டும் என்று தலைவர் திரு. கனகசபாபதி தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

திரு. வ. சுப்பையா தமது வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து பேசுகையில் சமய நூல்கள் பாவம் செய்யாமை, வாழ்வில் சீலம் இறையுணர்வு ஆகிய மூன்று உத்தம இலககணங்களைக் கூறுகின்றன. இந்த மூன்று பண்புகளையும் வளக்கவே நீதிநெறி நூல்களும் சமய நூல்களும் தோன்றின எனக் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் இறைவனைக் கனவிலும் நினையாமல் அவன் திருத்தாள் பணியாதிருப்போர்க்கு பிறவிக்கடலை நீந்தமுடியாது. அன்பருடனே கூடி அனுதினமும் துதிபாடினுல்தான் இன்ப சமுத்திரமாகிய முத்தியின் பத்தை அடையலாம் என்ருர்.

திருவாளர்கள் இ. வேலாயுதர், சி. சு. சின்னத்தம்பி, கோ. தேவராசா ஆகியோரும் பேசினர்.

## "எம்மிடையே முதலில் ஒற்றுமை ஏற்படவேண்டும்"

### கோப்பாய் முன்னுள் எம். பி. கூறுகிருர்

நல்லூர், ஞாயிறு

''இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களிடையே சிறுபான்மைத் தமிழினத்தின் நலன் கருதி சாதியொழிப்பு சட்டத்தைக் கொண்டுவந்ததே அமரர் வன்னியசிங்கமும் அமரர் இராஜவரோதயமும் என்பதை நாம் அறிவோம். அமரர் வன்னியசிங்கத்தை எத்தனையோ ஆயிரம் அதிகப்படியான வாக்குகளால் ஆட்சிமன்றத்துக்கு அனுப்பி வைத்த பெருமை கோப்பாய்த் தொகுதி மக்களுக்கே உரியது.''

இவ்வாறு கோப்பாய் தெற்கு, கல்வியங்காடு, கட்டைப்பிராய் வாலிப முன்னணியை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் கோப்பாய்த் தொகுதி வாலிப முன்னணி அமைப்புச் செயலாளர் திரு. துரை தனபால் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில். தமிழினத்தின் ஒற்றுமைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும்தான் சமூக குறைபாடு சட்டத்தின்கீழ் ஆலயப்பிரவேச வழக்குகளை திரு. கதிரவேலுப்பிள்ளை பேசினுர், அது தவறென்று தமிழினம் நினைத்தால் கோப்பாய்த் தொகுதியை மட்டுமல்ல, தமிழ்பேசும் அத்தனை தொகுதியிலும் தமிழரசுக்கட்சியைப் பகிஷ்கரிக்கட்டும். அதன்பின் தமிழினத்தின் உரிமைககாக போராட எந்தவொரு கட்சியாவது முன் வருகின்றதா என்பதை இருந்து பார்ககட்டும் என்கிருர்.

கோப்பாய்த்தொகுதி தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில், வாலிபர்களை தவருன வழியில் இழுத்துச் செல்வது எமது கட்சியின் நோக்கமல்ல. நல்லவழியில் செலுத்தி அவர்களின் எதிகாலத்தையும், தமிழினத்தின் நல்வாழ்வையும் அமைக்க வெற்றிநடை போடும் எமது கட்சி. எந்தெந்த வழியில் நல்வாழ்வை அமைக்க முடியுமோ அந்தந்த வழியை அமைப்பதுதான் எமது கட்சியின் முக்கிய நோக்கம் என்று கூறினுர்.

எமது தமிழினம் எமக்குள்ளேயே ஒரு பகுதியினரை சிறுபான்மை இனத்தவர் என்று புறக்கணித்துவந்தது அவர்களை அப்படியே விட்டுவிட்டால் தமிழினம் காலப்போக்கில் அழிந்துவிடும் என்பது எமக்குத் தெரியும்.

எமது தமிழினத்திற்குள்ளேயே இரண்டு மூன்று கூறுகளாகப் பிரிந்து அவர்களை தாம் நினைத்த போக்கில்விட்டால் அந்த இனத்தவர் சிங்கள பௌத்தர்களாக மாறும்போது எதற்காக தமிழ் சைவமதத்திலிருந்து சிங்கள பௌத்த மதத்தவனுக மாறினுய் என்று கேட்பதற்கு எந்தத் தமிழனுக்காவது உரிமை உண்டா? நாம் பல பிரிவுகளை பிரித்தால் எதிர்காலத்தில் சிறுபான்மைத் தமிழர்கள் மதம் மாறி, இனம் மாறி இறுதியில் அவர்களையே எங்களுடன் போராடத் தூண்டிவிடுவார்கள். இந்த நிலையை மாற்றி எமக்குள் ஒற்றுமையைஎப்போது ஏற்படுத்துகின்ருேமோ அதன்பின்தான் சிங்களவரிடமிருந்து எமக்கு உரிமை தா என்று கேட்பதற்கு ஒவ்வொரு தமிழனுக்கும்உரிமை உண்டு என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும் என்று திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் பேசுகையில் கூறினுர்.

சிறந்த நினைவுச் சின்னமாக விளங்குகின்றன என்றும் அத்துடன் புதிதாக வைக்கப்படும் சிலை ஆலயத்தின் பழைய பெருமைக்கும் சிற்ப அழகுக்கும் பொருத்தமாக அமையுமென்றும் முதலமைச்சர் தமது கடிதத்தில் குறிப்பிட்டார்.

இச்சிலை நிறுவும் விழா மே மாதம் நடைபெறும் என அறநிலைய பாதுகாப்பு துணை கமிஷனர் திரு. சங்காரவேலு தெரிவித்துள்ளார்.

## கறுப்புக்கொடிகளை வீசி ஆர்ப்பாட்டம் செய்தனர்

மதுரை, ஏப்ரல் 19

தமிழ்நாடு மின்சார இலாகா மந்திரி திரு. ஓ. பி. ராமனின் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் சென்ற வாரம் மதுரை ஸ்தலஸ்தாபனத் தொகுதியிலிருந்து மேல்சபைக்கு நடைபெற்ற தேர்தலில் தி. மு. க. அபேட்சகர் திரு. காதர் ஷாவுக்கு விரோதமாக வேலை செய்தார்கள். இதை ஆட்சேபித்து திரு. ஒ பி ராமன் மதுரையிலிருந்து திண்டுக்கல்லுக்குப் போய்க்கொண்டிருந்தபோது முப்பது தி. மு க அங்கத்தவர்கள் அவருக்கெதிரில் கறுப்புக்கொடிகளை வீசி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## ரூ. 700 பிணை

வல்வெட்டித்துறை, ஞாயிறு

துன்னலை தெற்கைச் சேர்ந்த கயிலாயர் சிதம்பரப்பிள்ளைஎன்பவர், சி. பொன்னம்மா என்பவரின் வீட்டை உடைத்து சுமார் 955 ரூபா பெறுமதியான நகைகளைக் களவாடியதாக பருத்தித்துறைப் பொலிசாரால் சந்தேகத்தின்பேரில் கைது செய்து பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராசா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது மாஜிஸ்திரேட் எதிரியை ரூபா 700 பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு மீண்டும் இம்மாதம் 20-ம் திகதி விசாரணைக்காக கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டுள்ளார்.

## சிறுத்தையை விரட்டிய சிறுவன்

ஜுனுகட், ஏப். 19

போர்பந்தருக்கு 25 மைல் தொலைவில் கட்கோலா என்ற கிராமத்தில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தான் கோவிந்தன் என்ற சிறுவன்.

எதிர்பாராத விதமாக ஆடுகளைத் தின்பதற்காகப் பாய்ந்து வந்த சிறுத்தையைத் தனது கையில் வைத்திருந்த ஆடு மேய்க்கும் கோலால் அடித்துத் துரத்திவிட்டான்.

வலி தாங்கமுடியாமல் சிறுத்தை ஓட்டமெடுக்கவே சுட்டுக் கொல்லப்பட்டது. சிறுவனுக்குச் சிறு காயங்கள் மட்டுமே ஏற்பட்டன.

## பாலர் வகுப்பு

சுழிபுரம், ஞாயிறு

வட்டுக்கிழக்கு சித்தன் கேணி மாதர் கழக மண்டபத்தில் பண்இசை, வயலின் பாலர் வகுப்புகள் மாதர் சங்கத்தினரால் தமிழ்-புத்தாண்டுதினத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

டுள்ளதாம்.

## தேவாலயம் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், திங்கள்

இதுவரை பொதுமக்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்படாதிருந்த யாழ்ப்பாணம் கோட்டை 'சேர்ச்' புனருத்தாரணம் செய்யப்பட்டு இப்போது பொதுமக்களுக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ சமயத்தவரின் இக்கோவில் ஒல்லாந்தரால் 1705-ல் கட்டப்பட்டதெனக் கருதப்படுகிறது. இக்கோயிலைப் புதுப்பிப்பதில் வண குலரத்தினம், வண நைல்ஸ் ஆகியோர் பெரும் முயற்சி எடுத்தனர். (கு வி ம)

## பொலிகண்டியில் ஈழத்து சித்தர்

பருத்தித்துறை, ஞாயிறு

தவத்திரு ஈழத்துச் சித்தர் திருமுருக திருநாவுக்கரசு சுவாமிகள் பொலிகண்டி கந்தசுவாமி கோவிலில் நூற்றுக்கணக்கான இளநீர்களை தலையில்அடித்து உடைத்துச் சிரசாபிஷேகம் செய்தார். ஏராளமான பக்தர்கள் குழுமியிருந்த இவ்வாலயத்தில் சுவாமிகள் மெய்சிலிர்க்கவைக்கும் பலவேறு நிகழ்ச்சிகளையும் அற்புதங்களையும் செய்துகாட்டினுர். சுவாமிகள் மிக அண்மையில் இந்தியாவில் யாத்திரை செய்தபோதும் ஆங்காங்கு தமது ஆத்மஞான பலத்தின் மூலம் இந்நிகழ்ச்சிகளைச் செய்துகாட்டியுள்ளார்.

...யில் இயங்குகிறது.

1947ம் ஆண்டு யு.என்.பி. முதல்தடவையாக ஆட்சி அமைத்தது. ஆட்சிஅமைப்பதற்கு ஒரு வருடத்துக்கு முன்னதாக யு.என்.பி. அங்குராப்பணம் செய்துவைக்கப்

## மகாகும்பாபிஷேகம்

கோப்பாய், ஞாயிறு

இருபாலைகிழக்கு வீரகத்தி விநாயராலய புனராவர்த்தன சம்புரோட்சண மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 22-ம் திகதி பகல்நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பூர்வீகப் பிரசித்திபெற்ற இவ்வாலயம் கடந்த 15 ஆண்டுகாலமாக பூசை வழிபாடின்றிப் பூட்டிக்கிடந்தது குறிப்பிடத்தக்கது,

மீண்டும் தற்பொழுது ஆலயம் புதுப்பிக்கப்பட்டு கோப்பாய் சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

......

## புதிய ஜே. பி.

கோப்பாய், ஞாயிறு

இப்பகுதியின் புதிய சமாதான நீதவானுக இம்மாதம் முதல் புரக்டர் திரு. எஸ். சுப்பிரமணியம் நீதி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கோப்பாய் கிராம சபையின் தலைவராகவும் உறுப்பினராகவும் இருந்து பல ஆண்டுகாலம் சேவையாற்றியவர்.

கிராம மக்களின் சமூக, பொருளாதார, சமய நலன்களுக்காக உழைத்த இவரைக் கௌரவிக்குமுகமாக அரசாங்கம் இவருக்கு ஜே. பி. பட்டம்வழங்கியுள்ளது.

காலியில் சம்பவம்:

## மனைவியைக்கொன்று கணவன் தற்கொலை

காலி, ஞாயிறு

மனைவியைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்த கணவன் கழுத்தில் சுருக்கிட்டுத் தன் உயிரை மாய்த்துக் கொண்டாராம். நெஞ்சையுருக்கும் இந்தச் சம்பவம் காலியில் நடந்துள்ளது.

காலி அடிஷனல் மாஜிஸ்திரேட் திரு. றெக்ஸ் விக்கிரமசிங்கா ஸ்தலத்தில் மரணவிசாரணை நடத்தினுர்.

யக்கலமுல்ல பொலிஸ் பகுதியைச் சேர்ந்த தெல்லம்புற என்ற இடத்தைச் சேர்ந்த எச். ஜி. பி. பேபி நோனு அவரது கணவர் மாட்டினுல் (49 வயது) கத்தியால் கழுத்தில் வெட்டிக் கொலை செய்யப்பட்டதாகவும் சந்தேக நபரான பெண்ணின் கணவர் மாட்டின் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இவர்களது மகன் சிறிபாலும் கத்தி வெட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாம்.

விசாரணை நடைபெறுகிறது.

ஜி. ஜி. கேட்கிருர்:

## "தமிழரசுக் கட்சி சாதித்தது என்ன?"

பருத்தித்துறை, ஞாயிறு

''1956 தொடக்கம் 1970 வரை பெரும்பான்மையான உறுப்பினரைக் கொண்ட தமிழரசுக் கட்சி தமிழ் மக்களைப் பொறுத்தவரை எதைச் சாதித்துள்ளதென்பதைக்கூறட்டும். இக்காலப் பகுதியிலேயே தமிழரின் உரிமைகள் பறிக்கப்பட்டு நடுக்கடலில் தள்ளப்பட்டதென்னும் கசப்பான உண்மையை எதிர்காலச் சரித்திராசிரியன் எழுதவேண்டிய கவலையான நிலைமை ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து இந் நிலைமை நிலவுமாயின் தமிழினம் இந்நாட்டில் மூன்ருந்தரக் குடிமக்களாக்கப்படும் காட்சியை இன்றைய பரம்பரையே காணக் கூடியதாயிருக்கும்''

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், பருத்தித்துறைத் தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளர் திரு. ந. நடராசாவை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கூறினுர்,

திரு. நடராசா பேசுகையில், தொகுதியின் அத்தியாவசில் தேவைகள் எவையென விளக்கி, அத்தேவைகளைப்பூர்த்திசெய்யத் தமக்கொரு சந்தர்ப்பமளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

## இராணுவப் பயிற்சி

வியன்டைன், ஏப். 10

லாவோசிலுள்ள சிவில் சேவை அதிகாரிகளும் மற்றும் இளைஞர்களும் இராணுவப் பயிற்சியளிக்கப்படுவார்களென்று லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவன்ன பூமா தெரிவித்தார்.

......

## தற்காலிகமாக அகற்றப்பட்டது

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் சந்தியில் நீண்டகாலமாக வைக்கப்பட்டிருந்ததமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் உருவப்படம் நேற்று முன்தினம் பொலிசாரின் கோரிக்கையைத் தொடர்ந்து தற்காலிகமாக அகற்றப்பட்டுள்ளது.

......

## ச. ஐ. வா. சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க ஆண்டுவிழாவின் போது பின் வருவோர் சங்கத்தின் புதுவருடநிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் நா. குருநாதன் உபதலைவர் பொ. செல்லத்துரை, காரியதரிசி மு, சந்திரசேகரம், உபகாரியதரிசி சி. குணசிங்கம், தனுதிகாரி ஆ. செல்லையா, உபதனுதிகாரி சி. இராசையா.

7 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## இசை விழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவின் 19-ம் ஆண்டு இசை விழாவின் நான்காம் நாள் நிகழ்ச்சிகள்

6-30-7-00 நாதஸ்வரம்: ஆம். எம். பஞ்சாபிகேசன், எஸ் ஏ பாலசுந்தரன், தவில்: கே எம் நடராசசுந்தரம், ரி என் சுப்பிரமணியம். 7-45 உப ஆணையாளர் பேரம்பலம் தலைமையுரை, 8-00 பாட்டு: செல்வி மாதுசிரோன்மணி வேலாயுதம், 9-15 பாட்டு: திரு. போல் திலகநாயகம்

## ச. ச. நிலைய நிர்வாகிகள்

வேலணை, ஞாயிறு

வேலணை இளங்கதிர் சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் திரு வே சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற போது புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரியப்பட்டனர்.

தலைவர் நா நாகரெத்தினம் உபதலைவர் திரு வே. சிவசுப்பிரமணியம். செயலாளர் பெ. செல்லத்துரை உபசெயலாளர் ச இராமலிங்கம்' பொருளாளர் வே. நடராசா, பத்திராதிபர் வ தம்பிஐயா. 6 நிர்வாகசபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நாம் கிணற்றுத்தவளைகளைப்போல வாழக்கூடாது. நமக்கு வெளியிலுள்ள உலகத்தையும் அவதானித்து வாழவேண்டும்.

— ராஜாஜி.


ஈழநாடு

Eelanadu (National Tamil Daily

Telegram: "EELANADU" Jaffna

Post Box: 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் சித்திரை மாதம் 7-ந் திகதி (20-4-70)


## தேர்தல் விஞ்ஞாபனங்கள்

தேர்தலில் போட்டியிடும் கட்சிகளும் அபேட்சகர்களும் தங்கள் கொள்கைகளை விளக்கியும் திட்டங்களை எடுத்துக்காட்டியும் தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிடுவார்கள். இது மரபும் கூட. தேர்தலில் தங்கள் கட்சியைத் தெரிவுசெய்து ஆட்சிபீடத்திலமர்த்திஞல் தங்கள் அரசாங்கம் மக்களுக்கும் நாட்டுக்கும் என்ன செய்யுமென்பதையும் தாங்கள் என்னென்ன திட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றக் காத்திருக்கிருர்களென்பதையும் இத் தேர்தல் விஞ்ஞாபனங்களில் கட்சிகள் விளக்கிக் கூறுவதுண்டு. தேர்தல்விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டவை யாவும் அந்தக் கட்சி ஆட்சிபீடத்திலமர்ந்த பின் நிறைவேற்றப்படுமா என்பது நிச்சயமில்லை; நிறைவேற்ற வேண்டுமென்ற கட்டாயமுமில்லை. இதுவரை எந்தக் கட்சியும் ஆட்சிபீடத்தில் அமர்ந்தபின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்தவைகளையோ, தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளையோ முழுக்க முழுக்க நிறைவேற்றியதாகவில்லை. வாக்காளர்களைப் பொறுத்தவரையில் கூட அவர்களும் தேர்தல்முடிந்ததும் தேர்தல் விஞ்ஞாபனங்களையும் மறந்துவிடுவதுண்டு.

அடுத்த தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் வேட்பாளர்களும் சுயேட்சை வேட்பாளர்களும் இன்னும் இரண்டு தினங்களில் அதாவது இம்மாதம் 23-ம் திகதி தங்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல்செய்யவிருக்கின்றனர் ஒருசில அரசியல் கட்சிகளைச் சேர்ந்த சிலரும் சுயேச்சை அபேட்சகர்களும் பொதுப்படையாக தேர்தல் துண்டுப்பிரசுரமாக கட்சியின் அடிப்படைக் கொள்கைகளையும் தங்கள் திட்டங்கள் சிலவற்றையும் வெளியிட்டிருக்கின்றனர், தென்னிலங்கையில் போட்டியிடும் இருபெரும் தமிழ்க் கட்சிகளாயினும் சரி இதுவரை தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களை உத்தியோகரீதியாக வெளியிடவில்லை

இந்தக் கட்சிகள் யாவும் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களைத் தயாரித்துமுடித்துள்ளபோதிலும் ஒரு கட்சியினர் முதலில் வெளியிட்டபின் அவசியமான திருத்தங்கள் செய்து வெளியிடலாமென மாற்றுக்கட்சியினர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாம்.

தேர்தல்காலத்தில் ஓர் அரசியல் கட்சி வெளியிடும் தேர்தல்விஞ்ஞாபனத்தில் அந்தக் கட்சி கொடுக்கும் வாக்குறுதியை, அந்தக் கட்சி ஆட்சிபீடத்துக்கு வர முடியாதபட்சத்தில், ஆட்சிபீடத்திற்கு வரும் மாற்றுக் கட்சி அடுத்த பொதுத்தேர்தல் வெற்றியைக் கருத்தில் கொண்டும் வாக்குறுதியளித்தகட்சியை மட்டந்தட்டவும் தாமே நிறைவேற்றி விடுவதுமுண்டு. இதற்கு உதாரணமாக போயாதின விடுமுறையைச் சொல்லலாம்.

எது எப்படியிருந்தாலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சில தொகுதிகளிலாவது தென்னிலங்கையின் இருபெரும் அரசியல்கட்சிகளான ஐக்கியதேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இம்முறை போட்டியிடுவதால் வகுப்புவாதத் தொனி அந்த இருபெரும் கட்சிகளின் தேர்தல்விஞ்ஞாபனங்களிலும் குறைவாகவே இருக்குமென்று எதிர்பார்க்கலாம். இது நாட்டின் எதிர்காலம் பற்றி ஓரளவாவது நம்பிக்கையளிப்பதாகும்.

தமிழ்க்கட்சிகள் தென்னிலங்கையிலும் தென்னிலங்கைக் கட்சிகள் வட இலங்கையிலும் தேர்தலில் தங்கள் அபேட்சகர்களை நிறுத்தும் காலம் வந்தால் வகுப்புவாதத்தைத் தூண்டி

# ‘காக்கைவன்னியன் காலத்திலிருந்து தமிழர்சரித்திரம்மங்க ஆரம்பித்தது’

## சித்தன்கேணி கலைநகரில் அமிர்

[நமது நிருபர் அ. சின்னையா]

சித்தன்கேணி, ஞாயிறு

''இலங்கைச் சரித்திரம் ஆரம்பமான காலந்தொட்டு இங்கு தமிழினம் வாழ்ந்து வந்திருக்கிறது. அவர்கள் இராவணன் காலத்திலும், அதற்கு முன்னரும் கண்ணியமாகவும் சுதந்திரம் உள்ளவர்களாகவுமே வாழ்ந்து இருக்கின்றனர். தமிழ் மன்னனுன சங்கிலியன் காக்கை வன்னியனுல் போர்த்துக்கேயரிடம் காட்டிக் கொடுக்கப்பட்ட பின்னரே தமிழரின் சரித்திரம் மங்கியது; அத்துடன் முடிவு காலமும் ஏற்பட்டது.''



இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி முன்னுள் எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், சித்தன்கேணி கலைநகர் நேருஜி சனசமூகநிலையத்தின் 14வது ஆண்டுவிழாவில் உரையாற்றுகையில் கூறினுர்.

மேற்படி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு திரு. மு. புஷ்பராசா தலைமைவகித்தார்.

திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் மேலும் கூறியதாவது:

''இலங்கை அடைந்த சுதந்திரம் உண்மையானதல்ல. சுதந்திரமடைந்த காலத்தில் உள்ள தலைவர்கள் விட்ட பெரும் தவறினுல்தான், இலங்கையில் சிறுபான்மையினர் பெரும்பான்மையினர் தயவில் வாழவேண்டிய நிலையேற்பட்டிருக்கிறது. 1948ம் ஆண்டுதான் பிரஜாவுரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. இதுதான் நாடற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்ட முதல் அடி. அன்றுதொட்டு தமிழ் மக்களின் பாரம்பரியமான மண்ணில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். அதுமட்டுமல்லாமல் கிழக்கு மாகாணத்தின் பெரும் செல்வமான ‘பட்டிப்பளை ஆறு’

கோட்ட மன்னனுல் வெட்டப்பட்ட பெரிய குளம் உள்ள கந்தளாய் என்னும் பகுதிகள் சிங்களப் பகுதிகளாக மாற்றப்பட்டன. 1956 முதல் 1965 வரை நாம் இடைவிடாது போராடியதன் காரணமாக எமது இனத்திற்கு நேரவிருந்த அபாயங்களைத் தடுத்து நிறுத்தினேம்.

1965ம் ஆண்டின் பின்னர் சில உரிமைகளைப் பெற்றேம். தமிழ் இளைஞர்கள், கண்ணீர், இரத்தம், வியர்வை சிந்தி, அஹிம்சை வழியில் போராடுவதன் மூலமே நாம் முன்னிருந்த நிலைக்கு வரமுடியும். சுவிட்சலாந்து, கனடா போன்ற நாடுகளில் உள்ள சமஷ்டி அரசியல் அமைப்புகள் போல, இலங்கையிலும், மத்திய அரசின் கீழுள்ள இணைப்பாட்சி எனப்படும் சமஷ்டி அரசியலமைப்பு மூலமே தமிழினம், சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழலாம். இதற்கு வாலிபர்கள் முன்னின்று உழைக்கவேண்டும்.''

திருவாளர்கள் எம். கே. அந்தனிசில், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உட்படப் பலர் பேசினர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

0 0 0

# ‘படகுச் சொந்தக்காரரர் மீது நடவடிக்கை எடுக்கவும்’

## பாலைதீவு விபத்து மரணம் பற்றி மரணவிசாரணை அதிகாரி அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

''சிறிய படகில் அதிகமானேரைப் பிரயாணம்செய்ய அனுமதித்ததே படகு விபத்திற்கு முக்கிய காரணமாகும். அதேவேளையில் அரசாங்க அதிகாரிகள்தமது கடமையைச் சரிவரச் செய்யாது அசிரத்தை காட்டியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது'' என யாழ்ப்பாணப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம், பாலைதீவு படகு விபத்துப் பற்றிய தமது அறிக்கையில் கூறி உள்ளார். இவ்விபத்தில் சம்பந்தப்பட்ட படகுச் சொந்தக்காரர்மீது நடவடிக்கை எடுக்கும்படி பொலிசாரை அவர் வற்புறுத்தியுள்ளார். மேலும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:-

''பாலைதீவு யாத்திரைக்குச் சென்ற பிராணிகளில் 58 பேர் விபத்தில்சிக்குண்டு மரணம் அடைந்தது யாவரும் அறிந்ததே, இவ்விபத்தில் சம்பந்தப்பட்ட படகு [illegible] பேருடன் வெளிச்சம் [illegible]வுமின்றி இரவில் புறப்பட்டுச் சென்றபோது இத் துர்ச்சம்பவம் [illegible] [illegible]லில் [illegible] [illegible]து தமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஜீவமரணமடைந்த சிலரால் இருளில் நடைபெற்ற இவ்விபத்துப் பற்றிய தகவல்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவர உதவமுடிந்தது.''

வெளிச்சமோ அல்லது உயிர்ப்பாதுகாப்புச் சாதன உதவிகளோ இல்லாது 12 மைல் தூரத்துப் பிரயாணத்தை கடும் இருளில் மேற்கொண்ட படகுச் சொந்தக்காரரின் செயல்பற்றி அறிக்கையில் சுட்டிக்காட்டும் மரணவிசாரணை அதிகாரி மேலும் கூறுவதாவது:

''சிறிய படகில் 80-க்கு மேற்பட்ட பிரயாணிகள் பாதுகாப்புடன் கரைபோய் சேரமுடியும் என எண்ணியதை என்னுல் கற்பனை செய்துபார்க்கவும் முடியவில்லை. கோயிலுக்குப்போக வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் இருந்தால் போதாது. எனது நினைவுக்கு எட்டிய வகையில் இவ்வாறுன பெரியதொரு விபத்து சமீபத்தில் இலங்கை வரலாற்றில் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

விபத்தின் மறுநாள் பிரேதங்களை ஆஸ்பத்திரி பிரேதசாலையில் கொண்டுவந்து [illegible] நிகழ்ச்சி [illegible] [illegible]த்தைவிட்டு இன்னும் நீங்கவில்லை கண்டுபிடிக்கப்பட்ட பிரேதங்[illegible]

# ஐயாறன் எழுதுவது

‘இந்தியாவுக்கும் இலங்கைக்குமுள்ள கலாச்சார உறவுகள் பலப்படுமாக’ என்று கல்வி கலாசார அமைச்சர் இரியகொல்லை புதுவருடத்தில் ஒரு வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். புதுவருடம் பிறந்த மறுநாள் கொழும்பிலே பண்டித ஸ்ரீ ரவிசங்கரின் சித்தார் வாத்தியக் கச்சேரி நடைபெற்றது. இலங்கை கலாசாரப் பகுதியினரும் இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனும் சேர்ந்து ஏற்பாடு செய்த கச்சேரி இது.

இக்கச்சேரியை முன்னிட்டு வெளியான ஒரு விசேஷ மலரில் கல்வி அமைச்சர் இரியகொல்லை. ரவிசங்கரை வரவேற்று அனுப்பியுள்ள செய்தியில் ‘பண்டித ஸ்ரீ ரவிசங்கரும் அவரது பக்கவாத்தியக்காரரும் இங்கு விஜயம் செய்துள்ளது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நீண்டகாலமாகத் தடைபடாமலுள்ள கலாசார பிணைப்புகளை மேலும் பலப்படுத்தும்’ என்கிருர்.

‘ரவிசங்கர் சர்வதேசப் புகழ் பெற்றவர். கிழக்கிலும் மேற்கிலும் அவர் புகழும் மதிப்பும் பெற்றவர். ஆகவே இந்திய இன்னிசைப் பிரியர்களுக்கு அவரை அறிமுகப்படுத்தத் தேவையில்லை. உண்மையில் ரவிசங்கருடைய பெயர் சித்தார் வாத்தியத்துடன்பிரிக்கமுடியாது இணைக்கப்பட்டுள்ளது.

‘இந்தியாவின் முதல்தர சங்கீத வித்வான்களுள் ஒருவரின் இன்னிசையைக் கேட்கக்கூடிய இந்த அரிய சந்தர்ப்பத்தை அளித்துள்ள இந்திய அரசாங்கத்துக்கு இலங்கை தேசிய அரசாங்கம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையேயுள்ள கலாசார உறவுகள் மேன்மேலும் பலப்படுமாக’ என்று கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். பொதுத்தேர்தல் நெருங்கியுள்ள இச்சமயத்தில் இலங்கையின் ஓர் அமைச்சர் இவ்விதம் கூறியுள்ளது அசாதாரணமாகும். பொதுத்தேர்தல் நெருங்கும் காலத்தில் இந்திய துவேஷமும் தமிழ்த் துவேஷமும் வளர்வது வழக்கமாகியிருக்கையில் ஓர் அமைச்சரே இருதேச கலாசார உறவுகள் மேன்மேலும் வளருமாக என்று துணிச்சலுடன் கூற முடிந்தது கரமாக ஒத்துழைத்துள்ளது போற்றத்தக்கது அவரைப் பற்றி வெளியான விசேஷ மலரில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் தான் கட்டுரைகள் வெளியாகியுள்ளன. தமிழில் ஒன்றுமில்லை ஏன்? அவரது அன்றைய கச்சேரிக்கு ஏராளமான தமிழர்களும் சென்றிருந்தனர். தமிழை ஏன் இலங்கை கலாசாரப் பகுதியினடும் இந்திய ஹைகமிஷனும் ஒதுக்கின? காரணம் எதுவாயினும் சரி இனி இவ்வித தவறுகள் நடக்கப்படாதென்பதற்காகவே இதை இங்கு குறிப்பிடலானேன்.

அதுமட்டுமல்ல. தமிழகத்திலே எவ்வளவோ முதல்தர கலைஞர்கள் உள்ளனர். அவர்கள் பக்கத்திலுள்ள ஈழத்துக்கு வர மிக ஆவலுடனிருக்கின்றனர். உதாரமாக கர்நாடக இசையிலே புகழ்பெற்ற கலாநிதி ஆலந்தூர் சீனிவாசய்யர் ஈழத்துக்கு வரத் தாம் மிக ஆவலுள்ளதாக என்னிடம்தெரிவித்தார், திருவையாறு அரசர் இசைக்கல்லூரியின் ஆண்டுவிழா இரண்டுவாரங்களுக்கு முன் நடைபெற்றது. சுமார் 60 பெண்மணிகள்வரை அங்கு கர்நாடக இசை பயிலுகின்றனர். படிப்பு, உணவு இருப்பு எல்லாம் அவர்களுக்கு இலவசம். ‘சங்கீத’ சிரோமணி என்ற சர்வகலாசாலைப்பட்டம் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. அக்கல்லூரி ஆண்டுவிழாவுக்கு ஆலயத்தார் சீனுவாசய்யரை கச்சேரி செய்ய அழைத்திருந்தனர். அவர் சுமார் மூன்று மணி நேரத்துக்குமேல் அருமையாகப் பாடினுர். திருப்புகழ் முதலிய தமிழ் இசையும் இடம்பெற்றது. ஒவ்வொரு வருசமும் இவ்விழாவை ஒரு வாரமாவது நடத்த வேண்டுமென்றும், தமிழகத்திலுள்ள முதல்தர வித்துவான்கள் வந்து பாடி, இசைமாணவிகளுக்கு வழி காட்ட வேண்டுமென்றும், தஞ்சை கலெக்டரின் பிரதிநிதி கேட்டுக்கொண்டார். அக் கல்லூரி கலெக்டரின் மேற்பார்வையில்தான் நடக்கிறது. இதற்கு ஆலத்தூரார் அளித்த பதிலில், ஒரு வாரகாலம் இக்கல்லூரியில் இசைவிழா நடப்பது வரவேற்கத்தக்கதும் பயனுள்ளதுமாகுமென்றும், தாம் ஒத்துழைப்பதுடன், பல வித்வான்களையும் ஒத்துழைக்கு மாறு செய்வதாகவும்

அக்கல்லூரியிலே ஈழத்து மாணவிகள் யாரும் இப்போது படிக்கவில்லை. ஈழத்துப் பெண்களையும் அதில் சேர்த்துக் கொள்வார்களா? சேருவதற்கு என்ன நிபந்தனை என்று அங்கு படிப்பிக்கும் ஓர் ஆசிரியரைக் கேட்டேன். ஈழத்து மாணவிகளைச் சேர்த்துக்கொள்ள எவ்வித தடையுமில்லை என்றும், எஸ்.எஸ்.ஸி பரீட்சையில் தேறி இருப்பதுடன் பூர்வாங்கமாக ஒரு நேர்முகப் பரீட்சை இருக்கலாமென்றும் தெரிய வந்தன. ஈழத்திலிருந்து அண்ணமலை பல்கலைக்கழகத்துக்கும், சென்னைக்கும் பல மாணவ மாணவிகள் இசை பயிலச் செல்லுகின்றனர். இனி திருவையாறுள் அரசர் இசைக் கல்லூரிக்கும் மனுச் செய்யலாம். அண்ணமலை கல்லூரிக்கு, இது எவ்விதத்திலும் குறைந்ததல்லவென்று அந்த சங்கீத ஆசிரியர் தெரிவித்ததுடன், ஈழத்து இசை மாணவிகளை திருவையாறு கல்லூரி மகிழ்ச்சியுடன் வரவேற்குமென்றும் சொன்னுர். பிரின்ஸிபால், அரசர் இசைக்கல்லூரி, திருவையாறு, தஞ்சாவூர் என்ற விலாசத்துக்கு எழுதி விவரங்களை அறியலாம்.

0 0 0

வட இந்தியக் கலைஞரான ரவிசங்கரை இலங்கையில் வரவேற்று அவரது கச்சேரிக்கு ஒழுங்குசெய்ததுபோல் ஆலத்தூரார் போன்ற தமிழகக் கலை மேதைகளையும் வரவழைக்க இந்திய ஹைகமிஷனும், கல்வி கலாசார அமைச்சும் முயற்சியெடுக்குமா? அவ்விதம் செய்வது, பல விதங்களிலும் வரவேற்கத்தக்கது. பொறுப்பானவர்களின் ஆதரவிலே அக்கலைஞர்கள் வருவது அவர்களுக்கும் கௌரவம். சில சுயநலமிகளின் கையில் சிக்கி அவர்கள் சுரண்டப்படாமல் இருக்கலாம். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் கலாசார உறவுகள் பலப்படவேண்டுமென்று கலாசார அமைச்சரும், இந்திய ஹைகமிஷனும் ஆர்வம்கொண்டுள்ளதாகத் தெரிவித்திருப்பதால் தமிழகத்திலுள்ள உயர் கலைஞர்களை வேற்றுமைப்படுத்தி ஒதுக்காமல் அவர்களையும் இங்கு வரவழைக்க இரு அரசாங்கங்களும் ஒத்துழைப்பதுடன் ஈழத்துக் கலைஞர்களில் தக்கவர்களைத் தமிழகம் உள்ளிட்டு இந்தி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

துண்டுப்பிரசுரமாக கட்சியின் அடிப்படைக் கொள்கைகளையும் தங்கள் திட்டங்கள் சிலவற்றையும் வெளியிட்டிருக்கின்றனர், தென்னிலங்கையில் போட்டியிடும் இருபெரும் பிரதான அரசியல் கட்சிகளாயினும் சரி தமிழ்ப்பகுதிகளில் போட்டி

னிலங்கையிலும் தென்னிலங்கைக் கட்சிகள் வட இலங்கையிலும் தேர்தலில் தங்கள் அபேட்சகர்களை நிறுத்தும் காலம் வந்தால் வகுப்புவாதத்தைத் தூண்டி விடவோ, நாட்டின் அமைதி குலையவோ வாய்ப்பு இருக்காது. அந்தநாள் வருமா?

பாரம்பரியமான மண்ணில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். அதுமட்டுமல்லாமல் கிழக்கு மாகாணத்தின் பெரும் செல்வமான 'பட்டிப்பளை ஆறு' 'கல் ஓயா' எனப் பெயர் மாற்றப்பட்டது கோணேசர் ஆலயத்திற்கென குளக்

பெருடன் வெளிச்சமுமின்றி இரவில் புறப்பட்டுச் சென்றபோது இத் துர்ச்சம்பவம் நிகழ்ந்தது. கடலில் படகு தத்தளித்த போது தமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஜீவமரணப் போராட்டத்தில் ஈடுபட்டு கரையைச் சென்

விபத்தின் மறுநாள் பிரேதங்களை ஆஸ்பத்திரி பிரேதசாலையில் கொண்டுவந்து குவித்த பரிதாப நிகழ்ச்சி எமது மனத்தைவிட்டு இன்னும் நீங்கவில்லை கண்டுபிடிக்கப்பட்ட பிரேதங்களையும் உயிருடன் சேர்ந்தவர்களையும் தவிர வேறு சிலரைப் பற்றிய தகவல் எதுவும் இன்னமும் கிடைக்கவில்லை.

இவ்விபத்து வருங்காலத்திலாவது அதிகாரிகளின் கண்களைத்திறப்பதற்கு அனுசரணையாக இருக்கவேண்டும்.''

யாத்திரிகர்களுக்குப்பூரண பாதுகாப்பானசேவைகிடைக்க அரசாங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை அறிக்கை விசேஷமாக வற்புறுத்தியுள்ளது

நய துவேஷமும் தமிழ்த் துவேஷமும் வளர்வது வழக்கமாகியிருக்கையில் ஓர் அமைச்சரே இருதேச கலாசார உறவுகள் மேன்மேலும் வளருமாக என்று துணிச்சலுடன் கூற முடிந்தது பெரிதும் வரவேற்கத்தக்கதாகும்.

0 0

இதைப்பற்றி ஓர் அன்பரிடம் கூறியபோது ஒரு வட இந்திய கலைஞர் வந்ததால்தான் இவ்வித வரவேற்புக் கிடைத்துள்ளதென்று அவர் கருத்துத் தெரிவித்தார் உண்மைதானு? பண்டித ஸ்ரீ ரவிசங்கர் உலகப்புகழ் பெற்ற ஒரு கலைஞர்; சிங்கப்பூர் செல்லும் வழியிலே இலங்கையிலே ஒரு சித்தார் கச்சேரி செய்ய இந்திய ஹைகமிஷனும் இலங்கை கலாசார அமைச்சும்வெற்றி

வாரகாலம் இக்கல்லூரியில் இசைவிழா நடப்பது வரவேற்கத்தக்கதும் பயனுள்ளதுமாகுமென்றும், தாம் ஒத்துழைப்பதுடன், பல வித்வான்களையும் ஒத்துழைக்கு மாறு செய்வதாகவும் உறுதிகூறினர் இனி திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜ உற்சவத்துடன் அங்குள்ள இசைக் கல்லூரியில் முதல்தரமான இசைவிழா ஒரு வார காலம் நடைபெறக்கூடும்.

கலைஞர்களை வேற்றுமைப்படுத்தி ஒதுக்காமல் அவர்களையும் இங்கு வரவழைக்க இரு அரசாங்கங்களும் ஒத்துழைப்பதுடன் ஈழத்துக் கலைஞர்களில் தக்கவர்களைத் தமிழகம் உள்ளிட்டு இந்தியாவில் வரவேற்று அவர்களது கலை நிகழ்ச்சிகளுக்கும் ஒழுங்கு செய்வது இரு நாட்டுக் கலை உறவுகளும் உண்மையில் பலப்பட வழி செய்வதாக இருக்கும்.

### மாதகல் நுணசை முருகமூர்த்தி உற்சவம்

# அடியார்க்கு அருளமுதை அருளும் மாதகல் நுணசை முருகமூர்த்தி தலவரலாறு

'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகத் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே'. இப்படி மிகவும் புராதனமானது இப்பொழுதுள்ள கோயில் பிற்காலத்தில் கட்டப்பட்டதாயினும் வழிபாடு வெகு காலத்துக்கு முற்பட்டது. இங்குள்ள தலவிருட்சமான கடம்பமரம் எப்போது உண்டானதோ அன்று தொடக்கம் முருக வணக்கம் உண்டானது. கடம்ப மரத்தின் காலத்தை வரையறுத்துக் கூற முடியவில்லை. இது காஞ்சியின் மாமரம் போலவும், மதுரையின்கடம்பமரம் போலவும், இத்தலத்துக்கு ஒரு விசேட தல விருட்சமாய் விளங்குகிறது. நங்கடம்பனைப் பெற்றவள்'கடம்பமர்காளை' என்பன இதுபற்றி எழுந்தனவன்றே இத்தலம் கீரிமலையிலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ளது.

தீர்த்தம்: கடம்ப விருட்சத்தைப்போல இங்குள்ள தீர்த்தமும் புராதனமானது. இத் தீர்த்தத்தில் ஏழு குண்டுகள் உண்டு அவற்றிற் சில வற்றின் ஆழம் தெரியாது. தினசரி ஸ்நானம் பண்ணுபவர்களின் பாதுகாப்பிற்காக அக் குண்டுகள் கற்பாறைகலினுல் மூடப்பட்டுள்ள இந்த ஏழு குண்டுகளிலும் சப்த மாதர்கள் வந்து நீராடிக் கந்தனை வழிபட்டுப் போவதற்ாக அமைந்துள்ளன என்பது ஐதீகம், இத் தாமரைத் தடாகம் எக்காலத்திலும் வற்ருது. மிகுந்த குளிர்ச்சியுடையது. நோய்களைத் தீர்க்கும் குணமுடையது.

முத்தி; இத்தலத்தின் மூர்த்தி உக்கிர வேலாயித மூர்த்தி. இதனை அழித்து முருகப்பிரானின் திருவுருவத்தை வைத்துச் சிலகாலம் வழிபட்டு மறுபடியும் வேலையே மூர்த்தியாய் அமைத்து அடியார்கள் வழி பட்டு வருகின்றனர். நல்லூரைப் போல வேலே இத் தலத்தில் மிகுந்த அனுக்கிரகத்தைச் செய்கின்றது.

அந்தமிமலாளியின் சீராலறுமுகம் படைத்த பண்பா
லெந்தைகனின்றும் வந்த வியற்கையாற் சதியாம்
பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையாற்றனி வேற்
பெம்மான்
கந்தனே யென்ன நின்னைக் கண்டுளக் கவலை நீத்தேம்

இப் பெருமான் அநுக்கிரகத்தால் வருடந்தோறும் டல திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இடையருது கடைந்தால் பாலிலிருந்து வெண்ணெய் வெளிப்படுபதுபோல் இடையருது தியானஞ் செய்தால் முருகப் பெருமான் வெளிப்படுவான். அரக்கு உருகினுல் தங்கம் உருகும் தங்கம் உருகினுல் மணி அதில் பதிந்து விடும். அதுபோல உள்ளம் உருகி உயிர் உருகி முருகனுடன் பதிந்து விடும். நம் உள்ளம் உருகவில்லையானுல் உயிர் எப்படி உருகும் முருகனுடன் எவ்வாறு ஒன்றுபட முடியும். எனவே, அன்பைப் பெருக்கி உள்ளத்தையும் உணர்வையும் உயிரையும் உருக்கி முருகனுடன் கலந்து இன்புறுவதே சைவத்தின் முடிந்த முடிபாகும். எமக்கு மரணம் வரு முன் அவன் திருவடியை வழிபட்டுத் திருவருளைப் பெற வேண்டும். நமக்கு இறைவன் உடலைத் தந்தது தம்மை வழிபடுவதற்கே யாம். இப் பிறவியிலே ஆகாமியத்தைச் செய்யாமல் நல்வினையைச் செய்து இறைவனடியை யடைய வேண்டும்,

முருகன் அன்புக் கடவுள் எங்கெல்லாம் தூய்மையான அன்பு இருக்கிறதோ அங்கெல்லாம் முருகன் விளங்குவார். முருகப் பிரானின் விரதங்களை அநுட்டித்து வருவோமேயானுல் சிந்தையில் நினைந்தவெல்லாம் முற்றி சிவகதியதனிற் சேவர்.

ஆகைய லயனறியாவரு
மறை மூலந்தெரிந்த
வேதநாயகன் விரத மெவ
ரேனும் போற்றியிடி
னேகையரனினைந்தவெலா
மொல்லை தாணிற்பெற்றி
டுவர்
மாக மேலிமைய வரு
வந்தவரை வணங்குவரே.
(கச்சியப்பர்)

'முருகன் கருணையே
கருணை'

''மேன்மை கொள் சைவ
நீதி விளங்குக உலகமெல்
லாம்''

## முருகன் தேர்

நுணசைக் கந்தன் தேரில் வரும் காட்சி நெஞ்சை அள்ளும் மறக்கமுடியாத இனியகாட்சியாகும். பல வகைச் சிற்பங்கள் பொருந்திய அழகிய தேரில் ஆறு முகங்களுடன் ஒளிபரப்பிக் கொண்டு அசைந்து வருவதைத்தரிசிக்க பரவசப்பட்டு கூடி நிற்கும் அடியார் கூட்டம் கொஞ்சமல்ல. அயற் கிராமங்களிலிருந்தும் அடியார்கள் அருள் பெற்று மகிழ்ந்து செல்வர். காலை தொடங்கி மாலைவரையும் பக்தர்களின் ஆனந்தக் கூத்துக் காவடிகள் தொடர்ந்து வரும் காட்சி பார்ப்பவர்களைப் பரவசப்படுத்திவிடும். அன்னையார் அடியழித்தும் கற்பூரக் சட்டிகளைத் தலைமிசை சுமந்தும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி முருகனை வழிபட்டு தியானிப்பர். திருவிழாக் காலமாகிய பன்னிருதினங்களிலும்

'ஆயிரங் கோடி காமர்
அழகெலாந் திரண்டொன்
ருகி
மேயின எனினும் செவ்
வேள் விமல மாஞ் சரணந்
தனில்
தூய நல்லெழிலுக்
காற்ரு தென்றிடின் இனைய
தொல்லோன்
மாயிரு வடிவுக் கெல்லாம்
உவமையார்வகுக்கவல்லார்'

- பொன். கந்தசாமி -

### கந்தபுராண விரிவுரை

1-ம் திருவிழா: உற்பத்தி காண்டம், 'திருக்கல்யாணப் படலம்' - பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை.

2-ம் திருவிழா: திருவவதாரப்படலமும், துணைவர் வரு படலமும். - பண்டிதர் கா. நமசிவாயம்.

3-ம் திருவிழா: தாரகன் வதைப்படலம். - பிரம்ம ஸ்ரீ வ. குகசர்மா.

அசுரகாண்டம் அசுரர் வரலாறு. - சைவப்புலவர் ச. செல்லத்துரை,

4-ம் திருவிழா: மார்க்கண்டேயப் படலம். - ஆசிரியர் வி. சிற்றம்பலம்.

அமரர் சிறை புகுபடலம் - வித்துவான் க. கணபதிப்பிள்ளை பி. ஏ.

5-ம் திருவிழா: மகேந்திர காண்டம், வீரவாகுதூது - பண்டிதர் இ. திருநாவுக்கரசு.

6-ம் திருவிழா: சிங்கமுகாசுரன் வதைப் படலமும், சூரபதுமன் வதைப்படலமும் -சைவப் பிரசாரகர் வி. நல்லையா.

7-ம் திருவிழா: தேவகாண்டம். தெய்வயானைதிருமணப் படலம் - பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி.

8-ம் திருவிழா தக்ஷகாண்டம். யோகி- க. கார்த்திகேசு.

9-ம் திருவிழா: கந்த விரதப்படலம் - சைவப்புலவர் நா. பொன்னையா.

10-ம் திருவிழா: வள்ளியம்மை திருமணப் படலம் - சைவப்புலவர்மணி த. குமாரசுவாமிப்பிள்ளை.

கந்தபுராணம் - பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

## மாதகல் — நுணசை முருகமூர்த்தி திருப்பதிகம்

— அருட்கவி சி. விநாசித்தம்பி —

காப்பு

வேதம் வரைந்தவனே வேழ முகத்தவனே
ஆதிப் பிரணவத்தின் ஐங்கரனே—மாதகலூர்
பொன்னுணசை மேவிப் பொலி முருகன் தாள்பாட
மன்னுகலை தந்தருள்வாய் வந்து.

சீலமார் கணபதிக்கிளைய முருகா போற்றி
ஸ்ரீ கைலை நாதனுதவும்
வேலவா போற்றி உமைதன் முலைப்பாலுண்ட
மெய்ஞ்ஞான குரு நாதனே
மாலினுக் கினிய மரு காபோற்றிசதுர்மறை
மருவும் ஓம் சரவணபவ
மூலனே மாதகற் பதி நுணசை ஸ்ரீமுருக
மூர்த்தியே போற்றி போற்றி

பத்தியிலகப் படும் பரமகுருநாதனே
பங்கயத் தயனை யன்று
தத்துவப் பொருள் கேட்டு மெத்துசிறையிட்டசிவ
சண்முகானந்த குகனே
சச்சிதானந்த சர்வலோகேஸ்வரா
தமியேனை யாள வருவாய்
முத்தி தரும் மாதகற் பதிநுணசை ஸ்ரீ முருக
மூர்த்தியே போற்றி போற்றி.

அத்தனுயர் செவியிலே அதிமதுர மெய்ஞான
அற்புதம் சொன்ன மகனே
வித்தகச் சூரகுலம் வேரோடு பொடியாத
வேல்விட்ட தேவதேவா
நித்தமுன் பாதமலர் நேச மொடு சேவைசெய
நின்கருணை பெய்தருள்வாய்
முத்தமிழின் மாதகற் பதி நுணசை ஸ்ரீ முருக
மூர்த்தியே போற்றி போற்றி.

கானமயில் வாகனு கவின் வேற்கொடியனே
கருது புகழுடுணை முனிவற்
கானதமிழ் தந்தவா அம்பலத்தானுதலில்
ஆறுசுடராய் வந்தவா
ஈனமிகு பவநோய்க ளெம்மை யணுகாதுன்றன்
இணைமலர்த் தாளருள்வாய்
மோனமிகு மாதகற் பதிநுணசை ஸ்ரீமுக
மூர்த்தியே போற்றி போற்றி

ஐ. தே. கட்சியை

## எதிர்த்து முஸ்லிம்கள் வாக்களிப்பர்

கம்பளை, ஞாயிறு

'சோஷலிசப் பாதையில் செல்லும் முஸ்லிம் சமூகத்தின் தடைசெய்யவியலாத இயக்கம் மகாவலியின்போக்கிலும் பார்க்க விரைவானது. முஸ்லிம்களின் இத்தகைய ஸ்திரமான இயக்கத்திலுல் இஸ்லாமிய சோஷலிச முன்னணி எதிர்வரும் பொதுத்தேர்தலில் 12 ஸ்தானங்களில் தனது அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது.

மரியவத்தையில் நடைபெற்ற சுதந்திரக்கட்சியின் பிரசாரக்கூட்டத்தில் இஸ்லாமிய சோஷலிச முன்னணித் தலைவர் அல்ஹாஜ் பதியுதீன் முகமத் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகயைில், முன்புபோல நாங்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று வாக்குக்கேட்க வேண்டியதில்லை, கடந்த 5 வருடங்களாக நடந்த நிகழ்ச்சிகளை மக்கள் அறிவர். சிறுபான்மையினரை தேசிய அரசாங்கம் நடாத்திய முறையிலிருந்து தாங்கள் யாருகு வாக்களிக்க வேண்டுமென்பதை தற்போது மக்கள் உணர்ந்துள்ளார்கள். 1965-ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது ஐக்கியதேசியக்கட்சி மக்களுக்குத்தான் நிறைவேற்றுவதாகக் கொடுத்த 21 வாக்குறுதிகளில் ஒன்றையாவது நிறைவேற்றவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக் கெதிராக வாக்களிக்க முஸ்லிம் மக்கள் ஏகமனதாகத தீர்மானித்துள்ளனர் எனக் கூறினுர்

திரு பி பி குணதிலகா திரு பேர்டிகங்க தரா, ஜனுப் வதூத், ஜனுப் புஹாரி உட்படப்பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

— பதியுதீன்

## மரண அறிவித்தல்

திரு. சங்கரப்பிள்ளை

யாழ்ப்பாணம் ஆனைப் பந்தியடி தேநீர்க் கடை உரிமையாளர் திரு என். சங்கரப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் திருமதி கண்மணியின் கணவரும், சண்முகலிங்கம், துரைச்சாமி, பரமலிங்கம், கேதீஸ்வரன் கமலாம்பிகை, ஆனந்தலட்சுமி, தனலட்சுமி யோகேஸ்வரி ஆகியோரின் தந்தையும், திரு. கணபதிப்பிள்ளையின் மாமனுருமாவர். அன்னரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆனைப் பந்தியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 2056

## முக்கிய அறிவித்தல்

### முல்லைத்தீவு வற்றுப்பளைக் கண்ணகை அம்மன் கோவில் பொங்கல்

மேற்படி பொங்கல் சாதாரண வருடம் வைகாசி மாதம் 4-ம் திகதி (18-5-70)ல் நடைபெறும்.

முதலியார் ஆ. மு கனகசபாபதி J. P U. M. தலைவர், வற்றுப்பளை கண்ணகை அம்மன் கோவில் பரிபாலனசபை, முல்லைத்தீவு. 2242

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ம் திக அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org